682

பைந்தமிழ் வாசகம்

மூன்றாம் வகுப்பிற்குரியது

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 AUG 1956
MADRAS

ஆசிரியர் :
வித்வான் ம. பெரியசாமிப்பிள்ளை

682
3-56

...கோபால் பிள்ளை
பதிப்பாளர்
...குளம் ...ப்பள்ளி | 2/27, பிராட்வே சென்னை-1.

6

பைந்தமிழ் வாசகம்

மூன்றும் வகுப்பிற் குரியது

[புதிய பாடதிட்டத்தை ஒட்டி எழுதப்பட்டுள்ளது.]

ஆசிரியர் :
வித்வான் ம. பெரியசாமிப் பிள்ளை
முன்னைய தலைமைத் தமிழாசிரியர், E. R. உயர்நிலைப்பள்ளி,
திருச்சிராப்பள்ளி.

T. G. கோபால் பிள்ளை
பதிப்பாளர் :

தெப்பக்குளம்
திருச்சிராப்பள்ளி

2/27, பிராட்வே
ஜி. டி., சென்னை

பதிப்புரிமை] 1956 [விலை அணா 8

முதற் பதிப்பு—நவம்பர், 1954
இரண்டாம் பதிப்பு—மே, 1955
மூன்றும் பதிப்பு—ஆகஸ்ட், 1955
நான்காம் பதிப்பு—ஜூன், 1956

TB
031 (3)
N56

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE
[Supplement to Part I-B of the
Fort St. George Gazette dated 4-5-1955, Page 9]

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை-600 008.
13330

Kabeer Printing Works, Madras (3256)

முன்னுரை

ஒவ்வொரு நாட்டினரும் தமது தாய்மொழியைப் போற்றிப் பயிலவேண்டுவது இன்றியமையாத கடமை யாகும். அதுபற்றியே நமது அரசியலாரும் ஆரம்ப பாடசாலைகளில் தாய்மொழிப் பயிற்சியை முதன்மை யான பாடமாகவும் கட்டாய பாடமாகவும் அமைத்துள் ளார். நமது தாய்மொழியாகிய தமிழ் ஒரு இனிய மொழி. தமிழில், ஆரம்ப பாடசாலைப் பாட புத்தகங்கள் பல வெளிவந்துள்ளன வாயினும், தமிழ் வளர்ச்சி கருதி மாணவர்க்குப் பயன்படும் வகையில் எத்தனை புத்தகங் கள் வெளிவரினும் நலமே. ஆதலின், '**பைந்தமிழ் வாசகம்**' என்னும் பெயரால் இப் புதிய பாட புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இப் புத்தகங்களிலுள்ள பாடங்கள் வகுப்புக்கேற்ற வண்ணமும், மாணவர்கள் மேலும் மேலும் புதிய சொற் களைக் கற்பதற்கேற்றவாறும் அமைக்கப்பட்டுள்ளன. மொழிப் பயிற்சியைத் தருதலே பாட புத்தகத்தின் முக்கிய நோக்கமாதலின், அதற்குத் தக்கவாறு பயிற்சிகளும் கேள்விகளும் தரப்பெற்றுள்ளன. மூன்று, நான்கு, ஐந் தாம் வகுப்புக்களில் அரும்பதவுரை கொடுக்கப்பட்டிருத்த லோடு அந்தந்த வகுப்புக்கேற்ற அளவு எளிய முறையில் பாட சம்பந்தமான உதாரணங்களைக்கொண்டு இலக்கண

விதிகள் விளக்கிக் காட்டப்பட்டுள்ளன. மாணவர்களுக்குச் சுவை பயக்கும் வகையில் அமைந்துள்ள கதைப் பாட்டுக்களும் உரையாடலும் அங்கங்கே வேண்டிய அளவு தரப்பட்டுள்ளன.

கல்வி இலாகா அதிகாரிகளும் கல்விச்சாலை யாசிரியரும் இப்புத்தகங்களைத் தங்கள் கல்விச் சாலைகளில் பாட புத்தகமாக வைத்து ஆதரிப்பார்களென்று நம்புகின்றேன்.

ம. பெரியசாமிப் பிள்ளை

உள்ளுறை

பாடம்			பக்கம்
1.	பசு	...	1
2.	வருவதிற் பாதி	...	5
3.	மண் பாண்டம் வனைதல்	...	9
4.	ஆறு, ஏரி, குளம் (உரையாடல்)	...	12
5.	நெற்பயிர்	...	15
6.	மாணவர்களின் கடமைகள் (செய்யுள்)	...	19
7.	அறிவுள்ள ஒரு முயல்	...	21
8.	நாய்	...	26
9.	ஓநாயும் கழுதையும் (படப் பயிற்சி)	...	30
10.	தண்ணீர்	...	31
11.	தமிழ் நாடு (செய்யுள்)	...	35
12.	கோழி	...	37
13.	வாசுகியம்மையார்	...	42
14.	இரயில் வண்டி	...	46
15.	வழிப்போக்கன் (செய்யுள்)	...	50
16.	தென்னை	...	54
17.	காந்தியடிகளும் குருடனும்	...	58
18.	தபாற் கடிதம் (உரையாடல்)	...	62
19.	ஒரு சாதுரியமான தீர்ப்பு	...	66
20.	மழை (செய்யுள்)	...	71
21.	சிங்கமும் சுண்டெலியும் (படப் பயிற்சி)	...	73
22.	பாரி	...	74
23.	குடிசைத் தொழில் (செய்யுள்)	...	78
24.	கிராம அதிகாரிகள் (உரையாடல்)	...	80
25.	ஆத்திசூடி (செய்யுள்)	...	85
26.	கொன்றைவேந்தன் (செய்யுள்)	...	88

பைந்தமிழ் வாசகம்

மூன்றும் வகுப்பிற்குரியது



1. பசு

1. நமது உணவுப் பொருள்களில் பால் ஒன்று. பாலைத் தனியாகவும் வேறு பொருள்களோடு கலந்தும் உட்கொள்ளுகிறோம். பாலிலிருந்து தயிரும் வெண்ணெயும் கிடைக்கின்றன. தயிரைக் கடைந்தால் மோராகும். வெண்ணெயைக் காய்ச்சினால் நெய்யாகும். இவ்வளவு உபயோகம் உள்ள பாலைக் கொடுக்கும் மிருகங்கள் எவை? பசுவும் எருமையும் அல்லவா ?

2. இவைகளில் பசு மிகவும் சாதுவான மிருகம். அதற்குப் பருத்த உடலும் குட்டையான

கால்களும் உண்டு. பசுவின் கனத்த உடலைத் தாங்குவதற்குப் பலமான கால்கள் வேண்டுமல்லவா? அதனால், அதன் கால்கள் மிகவும் உறுதியாக இருக்கின்றன.

3. பசுவின் கொம்புகள் சிறிது வளைந்திருக்கும். அதற்கு நீண்ட வால் உண்டு. வாலின் நுனியில் நீளமான மயிர் குஞ்சம் போல் அடர்ந்திருக்கும். அதனால் பசு தன் உடம்பில் மொய்க்கும் ஈக்களை ஓட்டிக்கொள்ளும்; தனக்குத் தீங்கு செய்பவர்களைக் கொம்பினால் முட்டித் தன்னைக் காத்துக்கொள்ளும்.

4. பசுவின் உடம்பில் தடித்த தோல் உண்டு. தோலில் குட்டையான உரோமம் அடர்ந்திருக்கும். இந்தத் தோலும் உரோமமும் கடவுள் அதற்கு அமைத்த சட்டையாகும். அதன் குளம்புகள் பிளவு பட்டவை. கொம்புள்ள எல்லா மிருகங்களுக்கும் பிளவுபட்ட குளம்பு உண்டு.

5. பசு தன் ஆகாரத்தை முதலில் நன்றாய் மென்று தின்பதில்லை; சிறிது மென்றவுடன் விழுங்கி விடும். அது, தான் ஓய்ந்திருக்கும் சமயத்தில் முன்பு விழுங்கிய உணவை மீண்டும் வாய்க்குக் கொண்டு வந்து நன்றாய் மென்று தின்னும். இவ்வாறு தின்பதற்கு அசைபோடுதல் என்று பெயர்.

6. பசு ஒரு தடவையில் ஒரே கன்று போடும். ஆண் கன்றுக்குக் காளை என்றும், பெண் கன்றுக்குக் கடாரி என்றும் பெயர். காளைக் கன்று வளர்ந்தால் காளைமாடு ஆகும். அதற்கு எருது என்று பெயர்.

7. பசுவுக்கு முக்கியமான உணவு புல். அது வைக்கோலையும், தட்டைகளையும் தின்னும். வீட்டில் வளர்ப்பவர்கள் அதற்கு ஆத்திக்கீரை, தவிடு, புண்ணுக்கு முதலியவைகளை ஆகாரமாக வைப்பார்கள். புண்ணுக்குக் கலந்த கழுநீரைப் பசு மிகவும் விருப்பமாகக் குடிக்கும்.

8. பசு மனிதருக்குப் பல வகையில் பயன்படுகிறது. அதன் பால் நமது உடலுக்குச் சுகம் தரும். நோயாளிகளுக்குப் பசுவின் பாலும் நெய்யும் மிகவும் ஏற்றவை. பசுவின் சாணம் வீட்டைச் சுத்தம் செய்வதற்கு உதவுகிறது; வயலுக்கு எருவாகவும் உபயோகப்படுகிறது. சாணத்தை வறட்டியாகத் தட்டி உலர வைத்து அடுப்பு எரிப்பார்கள்.

9. பசு பல வகையாக உபயோகப்படுவதால் மனிதர்கள் அதை மிகவும் பிரியமாக வளர்க்கிறார்கள்; சிலர் அதனைத் தெய்வமாகவும் கொண்டாடுகிறார்கள்.

எரு	கழுநீர்	உலர வை
கடாரி	தட்டை	பயன்படும்
ஓய்வு	வறட்டி	புண்ணுக்கு
தீங்கு	கனத்த	உட்கொள்
முட்டு	நோயாளி	மொய்க்கும்
சாணம்	ஏற்றவை	வெண்ணெய்
குஞ்சம்	உபயோகம்	அசைபோடுதல்
கலந்து	பிளவுபட்ட	

அரும்பதவுரை

ஏற்றவை - தக்கவை. தீங்கு - கெடுதல். பயன்படும் - உபயோகப்படும்.

எதிர்ப்பதங்கள்

பல × சில. தடித்த × மெலிந்த. உறுதியான × மிருதுவான. சுகம் × கஷ்டம்.

பயிற்சி

1. பசு பால் தரும்—இதில் 'பசு, பால், தரும்' என்ற மூன்று சொற்கள் இருக்கின்றன. இம்மூன்று சொற்களையும் சேர்த்துக் கூறும்போது கருத்து முழுதும் விளங்குகிறது. இம்மாதிரி பல சொற்கள் சேர்ந்து ஒரு முழுக் கருத்தைத் தெரிவிப்பது வாக்கியம் எனப்படும்.

குறிப்பு :—பசு—பசு பால்—பால் தரும்—பசு தரும்—என்று இம்மாதிரி சொன்னால் கருத்து முடியவில்லை. ஆகையால் இவைகள் வாக்கியம் அல்ல.

2. பின்னே ஒவ்வொரு எண்ணுக்கும் எதிரில் உள்ள சொற்களை ஒவ்வொரு வாக்கியமாக அமை :

(1) தரும் பால் பசு.

(2) புல் முக்கியமான பசுவுக்கு உணவு.

(3) நமக்கு மிகவும் பசு உள்ளது உபயோகம்.

கேள்விகள்

1. பசு எப்படிப்பட்ட மிருகம்?
2. பசுவினால் நமக்கு என்ன உபயோகம்?
3. எந்தெந்த மிருகத்துக்குப் பிளவுபட்ட குளம்பு இருக்கும்?
4. அசைபோடுதல் என்றால் என்ன?

2. வருவதிற் பாதி

1. திருவானைக்கா என்னும் ஊரில் சடையப்பர் என்னும் பெயருள்ள ஒரு பிரபு இருந்தார். அவர் மிகவும் நற்குணம் வாய்ந்தவர்; ஏழைகளுக்குச் சோறும் துணியும் கொடுப்பார்; தம்மிடம் வரு பவர்களை அன்போடு உபசரிப்பார்.

2. அவர் வீட்டில் ஒரு கலியாணம் நடந்தது. அப்பொழுது அவர் தமது நண்பர்களுக்கும் பந்துக் களுக்கும் ஒரு பெரிய விருந்து செய்ய எண்ணினர். விருந்தில் சிறந்த உணவு அளிக்கப்படும் அல்லவா? உணவு அளிப்பதற்கு வேண்டிய பொருள்களெல்லாம் இருந்தன. ஆனல் மாம்பழம் மட்டும் கிடைக்கவில்லை. விருந்துக்கு முக்கனிகளைச் சிறப்பாகக் கொள்வது தமிழ் நாட்டு வழக்கம். முக்கனிகளில் மாங்கனி ஒன்று. அதனல், சடையப்பர் கவலையோடு தம் அறையில் உட்கார்ந்து என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்தார்.

3. அப்போது தெருவில் ஒருவன் ஒரு கூடை நிறைய அருமையான மாங்கனிகள் கொண்டு வந் தான். அவன் சடையப்பர் வீட்டில் திருமணம் நடப் பதை அறிந்து அவர் வீட்டுக்கு வந்தான்; அங்கு மாம்பழத்தை நல்ல விலைக்கு விற்கலாம் என்பது அவன் எண்ணம்.

4. வீட்டின் வாயிற்படியில் இருந்த காவற்கார னிடம் தன் எண்ணத்தைக் கூறித் தன்னை உள்ளே

விடுமாறு கேட்டான். காவற்காரன் "உனக்கு வருவதில் பாதி கொடுப்பாயா? உள்ளே விடுகிறேன்," என்ருன். பழக்காரன் அவனுடைய அயோக்கியத்தனத்துக்குத் தக்க தண்டனை கொடுக்க வேண்டும் என்று எண்ணினுன். அதனுல், "நீ கேட்டபடியே எனக்கு வருவதிற் பாதி தருகிறேன்," என்று கூறினுன்.

5. காவற்காரன் மிகவும் மகிழ்ச்சியுடன் அவனை உள்ளே விட்டான். பிரபு மாம்பழம் வந்த செய்தி அறிந்து விரைவாக வந்து பார்த்தார்; மாங்கனிகள் இனிய சுவையுடையன என்பதையும் அறிந்துகொண்டார். உடனே, "இந்தப் பழமெல்லாம் என்ன விலையாகும்?" என்று கேட்டார். பழக்காரன் மிகுந்த பணிவோடு, "ஐயா, பிரபுவே, எனக்கு வேறு ஒன்றும் வேண்டாம்; இவற்றின் விலையாக என் முதுகில் ஒரு 'டசன்' பிரம்படி கொடுத்தால் போதும்," என்று சொன்னுன்.

6. அது கேட்ட பிரபு மிகுந்த ஆச்சரியமுற்று, "உனக்கென்ன பைத்தியமா? பழத்துக்கு அடியை விலையாகக் கேட்கிருயே!" என்ருர். உடனே பழக்காரன், "ஐயா, என் விருப்பம் இது; அடி கொடுத்தால், பழம் கொடுப்பேன்; இல்லாவிட்டால் நான் போகிறேன்," எனக் கூறினுன்.

7. பிரபு இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கவேண்டும் என்று அறிந்துகொண்டார். அதனுல் பழக்காரன் முதுகில் மெதுவாகப் பன்னிரண்டு அடி கொடுக்குமாறு தம் வேலைக்காரன் ஒருவனுக்குக் கட்டளை

இட்டார். அவனும் பழக்காரனைப் படுக்கவைத்து அவன் முதுகில் அடித்தான்.

8. பழக்காரன் ஒன்று-இரண்டு-என எண்ணிக் கொண்டேயிருந்து ஆருவது அடி விழுந்தவுடனே, "நிறுத்து! நிறுத்து!! என்னுடைய கூட்டாளி ஒருவன் இருக்கிருன்; அவனுக்கு ஆறடி கொடுக்க வேண்டும்," என்று கூவினுன். பிரபுவும் மற்றவர்களும் மிகவும் வியப்படைந்தார்கள். பிரபு, "உன் கூட்டாளி யார்?" என்று வினவினுர். உடனே பழக்காரன், "வாயிற் காப்பவனே என் கூட்டாளி," என்று சொல்லி, நடந்தவற்றைக் கூறினுன்.

9. பிரபு பழக்காரனுடைய புத்திக் கூர்மையை மிகவும் பாராட்டினுர்; தம்முடைய காவற்காரனை வரவழைத்து விசாரித்து உண்மை அறிந்தார்; உடனே அவன் முதுகில் பலமாக ஆறு அடி கொடுக்கச் செய்து அவனை வேலையிலிருந்து நீக்கி விட்டார். அவனும் வந்ததிற் பாதி பெற்று மிக்க விசனத்துடன் வீடு சேர்ந்தான். பிரபு மிகுந்த மகிழ்ச்சியோடு பழங்களுக்கு இருமடங்கு விலை கொடுத்தார்; அதனோடு பழக்காரனுக்குப் பரிசாக ஒரு பவுனும் அளித்தார்.

அளி	விசாரி	தண்டனை	புத்திக்கூர்மை
பந்து	பிரபு	சூழ்ச்சி	தற்செயலாக
பவுன்	கவலை	அருமை	திருமணம்
மடங்கு	பாராட்டு	உபசரி	அயோக்கியத்தனம்
மகிழ்ச்சி	கூட்டாளி	நற்குணம்	

அரும்பதவுரை

பிரபு - பணக்காரர். அளி - கொடு. உபசரிப்பார் - மரியாதை செய்வார், வரவேற்பார். திருமணம் - கலியாணம். அயோக்கியத்தனம் - ஒழுங்கீனம். தற்செயல் - தானுக நிகழ்வது. கூட்டாளி - சேர்ந்தவன். பாராட்டினுர் - மெச்சினுர், கொண்டாடினுர். விருப்பம் - ஆசை. சூழ்ச்சி - தந்திரம்.

எதிர்ப்பதங்கள்

அயோக்கியன் × யோக்கியன். பிரபு × ஏழை. விருப்பம் × வெறுப்பு.

பயிற்சி

1. காவற்காரன், பழக்காரன்—இம்மாதிரி 'காரன்' என்று முடியும் சில சொற்கள் கூறு.

2. காவற்காரனும் பழக்காரனும் பேசிக்கொள்வதுபோல நான்கு வாக்கியங்கள் கூறு.

(உ - ம்.)

காவற்காரன் : ஐயா, எங்கே போகிறீர் ?

பழக்காரன் : பிரபுவுக்கு மாம்பழம் கொண்டு வந்திருக்கிறேன் ; உள்ளே போகவேண்டும்.

கேள்விகள்

1. சடையப்பர் என்பவர் யார் ? அவர் எந்த ஊரில் இருந்தார் ? அவர் எப்படிப்பட்ட குணம் உள்ளவர் ?

2. காவற்காரன் என்ன தவறு செய்தான் ? அதனுல் அவன் அடைந்த பலன் என்ன ?

3. இக்கதையிலிருந்து என்ன நீதி விளங்குகிறது ?



3. மண்பாண்டம் வனைதல்

1. உங்கள் வீட்டில் சமையல் செய்வதற்கு உபயோகப்படும் பாத்திரம் எது? பாத்திரத்துக்குப் பாண்டம் என்றும் பெயர். சிலர் வெண்கலப் பாத்திரத்தில் சமைப்பார்கள். சிலர் மண்பாண்டங்களில் சமையல் செய்வார்கள். மண்பாண்டம் செய்கிறவன் குலாலன்.

2. குலாலன் எவ்வாறு மண்பாண்டம் வனைகின்றான்? உங்களுக்குத் தெரியுமா? மண்பாண்டம் வனைவதற்கு முக்கியமாக வேண்டுவது மண். அதனோடு தண்டம், சக்கரம் முதலியவைகளும் வேண்டும். தண்டம் என்பது ஒரு கோல். மண்ணானது மெல்லிய மணல் கலந்த களிமண்ணாக இருக்க வேண்டும். வெறுங் களிமண்ணாக இருந்தால் பாண்டங்கள் காய்ந்தவுடன் வெடித்துப் போகும்.

3. குலாலன் மண்ணில் கல் முதலியவை இல்லாமல் செய்து, நன்றாகப் பிசைந்து வைத்துக் கொள்வான். பின்பு தன் எதிரில் ஒரு மணையின்மேல் சக்கரத்தைப் படுக்கை வசமாக வைத்து அதன் நடுவில் மண்ணை வைப்பான். பின்பு கோலினால் சக்கரத்தைச் சுற்றிவிடுவான். சக்கரம் சுழலும் போது, தான் வேண்டிய உருவத்துக்குத் தக்கபடி மண்ணைத் தன் கைகளால் பிடித்து அழுத்துவான்.

4. அப்பொழுது சக்கரம் சுழன்றுகொண்டே இருக்கவேண்டும். அவன் தான் நினைத்த வடிவம் வந்தவுடன் அந்த வடிவத்தின் அடிப் பாகத்தை ஒரு சிறு கத்தியால் அறுத்துச் சக்கரத்திலிருந்து எடுத்து நிழலில் உலர வைப்பான். இவ்வாறு எடுத்த பாண்டத்தின் அடிப்பாகத்தை ஒரு வகை மரக்கட்டையால் மெதுவாகப் பலமுறை தட்டுவான். இவ்வாறு தட்டத் தட்ட பாண்டத்தின் அடிப்பாகம் செம்மையாக அமையும். இதன் பிறகுதான் வெயிலில் உலரவைப்பான்.

5. உலர்ந்த பாண்டங்களைக் காவி தடவிச் சிறிது மேடான இடத்தில் வட்டமாக அடுக்குவான். இவ்வாறு அடுக்கும்போதே வறட்டிகளையும் உலர்ந்த தட்டைகளையும் அவைகளின் இடையில் வரிசையாக வைப்பான். பின்பு அக் குவியலின் மேற்புறத்தை வைக்கோலால் மூடிச் சேறு பூசித் தீ மூட்டுவான். இதற்குத்தான் சூளை வைத்தல் என்று பெயர். சூளை வெந்து அடங்கிய பிறகு அதைப் பிரித்துப் பாண்டங்களை எடுப்பான்.

6. மண்ணால் செய்யப்படும் பாண்டங்கள் பானை, சட்டி, குடம், தோண்டி, கூசா, தட்டு, தாழி, கூன் முதலியன. குதிரும் தொட்டியும் மண்ணினால் செய்யப்படுவது உண்டு.

7. மண்பாண்டம் மற்றப் பாத்திரங்களை விட விலை குறைவானது. அதனால், ஏழை மக்கள் மண்பாண்டங்களை மிகுதியாக உபயோகிக்கிறார்கள். மண்பாண்டம் உடைந்துவிடக் கூடியது. ஆகையால் மிகவும் கவனமாக அவைகளை உபயோகிக்க வேண்டும். மண்பாண்டங்களில் சமைக்கப்படும் உணவு உடம்புக்கு நல்லது.

பிசை	அழுத்து	வனைதல்	வெடித்து
காவி	பாண்டம்	இடையில்	ஆராய்ந்து
சூளை	பாத்திரம்	சமையல்	வெண்கலம்
மணை	களிமண்	தண்டம்	குதிர்

அரும்பதவுரை

தண்டம் - கோல். மணை - பலகை. செம்மையாக - சரியாக, நன்றாக. இடையில் - மத்தியில்.

பயிற்சி

1. இரு பொருள் கூறுக :—செம்மை, தண்டம்.
2. உருவம், சுழலும், சுற்றுவான் - இச்சொற்களைப் பின் வரும் வாக்கியங்களில் உரிய இடத்தில் சேர்த்துப் படி.

யானை பெரிய ——— உடையது.
குயவன் சக்கரத்தைச் ———.
காற்றாடி ———.

கேள்விகள்

1. மண்பாண்டங்கள் எவ்வாறு செய்யப்படுகின்றன ?
2. மண்பாண்டங்கள் வனைவதற்கு வேண்டிய பொருள்கள் யாவை ?
3. உங்கள் வீட்டில் உள்ள மண்பாண்டங்களைக் கூறு.



4. ஆறு, ஏரி, குளம்

[உரையாடல்]

தகப்பனார் : இதோ, ஆற்றுக்கு வந்து விட்டோம். பாலா! தண்ணீரில் ஆழத்தில் இறங்காதே!

பாலன் : இல்லை அப்பா! இறங்கினால் தண்ணீர் இழுத்துவிடும் என்று தெரியும்.

தகப்பனார் : பாலா! இந்த ஆறு எந்தத் திசையிலிருந்து எந்தத் திசையாக ஓடுகிறது?

பாலன் : மேற்கிலிருந்து கிழக்காக ஓடுகிறது.

தகப்பனார் : சரி, ஏன் அப்படி ஓடுகிறது?

கமலா : அப்பா, மேற்கே மேடான இடம், கிழக்கே தாழ்வான இடம்.

தகப்பனார் : இதனால் என்ன தெரிகிறது?

கமலா : தண்ணீர் மேடான இடத்திலிருந்து தாழ்வான இடத்திற்கு ஓடும் என்பது தெரிகிறது.

தகப்பனுர் : சரி. ஆறுகள் மலையிலிருந்து வரும்பொழுது, கல்லை உடைத்து மணலாகக் கொண்டுவரும். நதிக்கு இரண்டு பக்கங்களிலும் கரைகள் உண்டு. நாம் வலது கரையில் இருக்கிறோம். எதிர்ப் பக்கத்துக் கரை இடது கரை. இந் நதியில் சனங்கள் என்ன செய்கிறார்கள்? சொல்.

பாலன் : சிலர் குளிக்கிறார்கள். சிலர் கரையில் ஆடைகளைத் துவைக்கிறார்கள். சிலர் குடிப்பதற் குத் தண்ணீர் எடுத்துக்கொண்டு போகிறார்கள்?

கமலா : ஏன் அப்பா, இந்த நீர் காவிவர்ண மாக இருக்கிறது?

தகப்பனுர் : இந்த ஆறு, மலையிலிருந்து வரும்போது வழியிலுள்ள செம்மண்ணைக் கரைத்துக் கொண்டு வருகின்றது. அதனால்தான் இந்நீர் காவி நிறமாக உள்ளது. நீரில் கரைந்து வரும் மண் வண்டல் எனப்படும். இந்த வண்டல் நீரை நிலத் திற்குப் பாய்ச்சினுல் பயிர் செழிக்கும்.

கமலா : நதி இல்லாத இடங்களில் என்ன செய்வார்கள்?

தகப்பனுர் : ஏரி, குளம், கிணறு இவைகளை உபயோகிப்பார்கள். இன்னும், நதியின் குறுக்கே அணைகட்டி நீரைத் தேக்கி, அத்தேக்கத்திலிருந்து கால்வாய்கள் வெட்டி, அவற்றின் மூலமாய் அதைக் கொண்டு போவார்கள். அந்நீரை ஒரு பெரிய ஏரி

யிலோ, குளத்திலோ தேக்குவதும் உண்டு. சில ஏரி களும், குளங்களும் மழை நீரால் நிரம்பும். குளம், ஏரி இவைகளைச் சுற்றிக் கரை போட்டிருப்பார்கள். தண்ணீரை வயல்களுக்குப் பாய்ச்ச, அநேக இடங் களில் மதகுகள் இருக்கும். நதி, குளம், ஏரி இந் நீர்நிலைகளின் கரைகள் உடையாமலிருக்க அடிக்கடி பழுதுபார்க்க வேண்டும்.

மேடான	ஆடை	காவிவர்ணம்
தாழ்வான	துவைக்கிறுர்	கால்வாய்
தேக்குவது	மதகு	வண்டல்

அருஞ்பதவுரை

தேக்குவது - தங்கி நிற்கச் செய்வது. மதகு - ஏரி முதலிய வற்றிலிருந்து நீர் பாயும் வழி. வர்ணம் - நிறம். பழுது பார்த்தல் - செம்மைப் படுத்தல்.

பயிற்சி

பூ, வா, போ - இவை தனித்தனி எழுத்துக்கள். இவற்றிற் குப் பொருள் உண்டு. பொருளைக் குறிக்கும்போது இவை சொற் கள் எனப்படும். பூ, வா, போ என்பன ஓரெழுத்துச் சொற்கள். பூமி, ஆண்டு, சங்கம் - இவை பல எழுத்துக்களால் ஆகிய சொற்கள். ஆகையால், எழுத்துக்கள் தனித்தாவது தொடர்ந் தாவது பொருளைத் தெரிவித்தால் சொல் அல்லது பதம் எனப் படும்.

கேள்விகள்

1. தண்ணீர் எங்கிருந்து எங்கே ஓடும்?
2. ஆற்றில் வண்டல் மண் எப்படிச் சேர்கிறது?
3. நமக்கு நீர் நிலைகளின் உபயோகங்கள் என்ன?

5. நெற்பயிர்

1. நாம் உண்ணும் ஆகாரத்தில் பெரும்பாகம் சோறு. சோற்றுக்கு அன்னம் என்றும் சாதம் என்றும் பெயர். சோறு எவ்வாறு ஆக்கப்படுகிறது? அரிசியை உலைநீரில் போட்டு வேக வைத்தால் சோறாகும். அரிசி எதிலிருந்து கிடைக்கிறது? நெல்லில் இருந்து கிடைக்கிறது. ஆகையால், நமது உணவுக்கு உபயோகப்படும் பொருள்களில் நெல் முக்கியமானது அல்லவா? அது தானிய வகைகளில் ஒன்று. நெல் லைத் தரும் பயிர் நெற்பயிர் என்று கூறப்படும்.



2. நெல் விளையும் நிலத்துக்கு நன்செய் என்

றும், கம்பு, சோளம் முதலியவை விளையும் நிலத்துக்குப் புன்செய் என்றும் பெயர். ஆகையால், நெற்பயிர் நன்செய்ப் பயிர் என்று கூறப்படும்.

3. நெல் விளையும் நிலம் வண்டல்மண் உள்ளதாக இருக்கவேண்டும். மணற்பாங்கான பூமியிலும், சுக்கான் பூமியிலும், களர் நிலத்திலும் நெல் நன்ருக விளையாது. நெற்பயிருக்குத் தண்ணீரும் வெப்பமும் மிகுதியாக வேண்டும்.

4. நன்செய் நிலத்தில் முதலில் தண்ணீர் பாய்ச்சுவார்கள். சில நாள் சென்றவுடன் ஏரிஞல் உழுவார்கள். தண்ணீர் பாய்ந்த நிலம் நன்ருக ஊறியிருக்கும் அல்லவா? ஆகையால், இரண்டு மூன்று முறை உழுதால் நிலம் சேருகிவிடும். பின்பு, அது மட்டமாக இருப்பதற்குப் பரம்படிப்பார்கள். அதன் பிறகு விதை தெளித்து வயலில் உள்ள நீரை வடிய விடுவார்கள். நெல் விதையைத் தெளிப்பதற்கு முன் ஊற வைப்பது உண்டு.

4. நெல் முளைத்துக் குறும்பயிராக இருக்கும் போது அதற்கு நாற்று என்று பெயர். நாற்று என்பதற்கு 'முளைத்தது' என்று பொருள். நாற்று முளைத்திருக்கும் நிலத்துக்கு நாற்றங்கால் என்று பெயர். நாற்று மிகவும் நெருங்கியிருக்கும்.

6. நாற்றைப் பிடுங்கி, நன்ருக உழுத வேறு நிலத்தில் சிறிது சிறிது இடம் விட்டு நடுவார்கள். நாற்று அந்த நிலத்தில் நன்ருக வேரூன்றி வளரும். இவ்வாறு வளரும்போது அடிக்கடி தண்ணீர் பாய்ச்ச

வேண்டும். நெற்பயிர் வளரும் நிலத்தில் புல்லும் வேறு செடிகளும் வளர்வது உண்டு. இவற்றை வளரவிட்டால் நெற்பயிர் நன்றாக வளராது. ஆதலால், இவற்றைப் பிடுங்கி எறிவார்கள். இதற்குக் களைபறித்தல் என்று பெயர்.

7. நெற்பயிர் முற்றினவுடன் கதிர்விடும். நெற்கதிரில் நெல் வரிசையாக இருக்கும். கதிர் முற்ற முற்ற, பயிர் பழுத்துச் சாய்ந்துவிடும். ஏன்? நெற்பயிரின் தாள் குழாய் போன்றது; மிகவும் மெல்லியது; அதனால், நெல்மணிகளின் கனம் தாங்க முடியாமல் சாய்ந்துவிடுகிறது.

8. பழுத்துச் சாய்ந்த நெற்பயிரைத் தாளோடு அரிந்து சுமை சுமையாகக் கட்டிக் களத்துக்குக் கொண்டுபோய் அடிப்பார்கள். அடிக்கும்போது நெல் வேறாகப் பிரிந்துவிடும். நெல் நீங்கிய தாளுக்கு வைக்கோல் என்று பெயர். வைக்கோலைப் போராகப் போடுவார்கள். நெல்லோடு பதரும் கலந்திருக்கும். உள்ளே அரிசி இல்லாதது பதர்; அரிசி உள்ளது நெல். நெல்லைத் தூற்றி அதிலுள்ள பதரை நீக்குவார்கள். பின்பு நெல்லை மூட்டை மூட்டையாகக் கட்டி, வீட்டிற்குக் கொண்டு வருவார்கள். நெல்லைச் சேர்த்து வைக்கும் இடத்திற்குக் குதிர் என்றும் களஞ்சியம் என்றும் பெயர்.

9. நெல்லில் கார்நெல், குறுவைநெல், சம்பா நெல் எனப் பலவகை உண்டு. இவற்றில் குறுவை இரண்டு மாதத்திலும், கார் மூன்று மாதத்திலும்

விளையும்; சம்பா விளைய ஆறுமாதம் ஆகும். சம்பா அரிசியால் சமைக்கப்படும் சோறே மென்மையாகவும் சுவையுள்ளதாகவும் இருக்கும். ஆகையால், சம்பா நெல் அதிக விலையுள்ளது.

முளை	களை	தாள்	கார்
வடிய	குதிர்	சம்பா	பரம்பு
குறுவை	நாற்று	மட்டம்	நன்செய்
புன்செய்	சுக்கான்	உலை நீர்	களர்நிலம்
களஞ்சியம்	மணற்பாங்கு		

அரும்பதவுரை

செய் - வயல், நிலம். நன்செய் - நல்ல நிலம். புன்செய் - கீழ்த்தரமான நிலம். மட்டமாக - மேடு பள்ளம் இல்லாமல், சமமாக. களை - பயிருக்கு ஆகாத புல், செடி முதலியன.

பயிற்சி

உனக்குத் தெரிந்துள்ள நன்செய், புன்செய்ப் பயிர்களின் பெயரைக் கீழே உள்ள கட்டத்தில் எழுது.

நன்செய்ப் பயிர்	புன்செய்ப் பயிர்

கேள்விகள்

1. எப்படிப்பட்ட நிலத்தில் நெல் நன்ருக விளையும்?
2. நெல் பயிரிடுவோர் நிலத்தில் செய்யவேண்டிய வேலைகள் என்ன?
3. நெல்லில் பலவகை யாவை?

6. மாணவர்களின் கடமைகள்

1. படிக்கின்ற பிள்ளைகாள், நீங்கள்—நாளும்
விடுக்காமற் செய்கடன் விளம்புவேன் கேளீர்.

2. விடியும்போ தெழுந்திட வேண்டும்—கடவுள்
அடிகளை அன்புடன் துதிசெய்ய வேண்டும்.

3. காலைக் கடன்செய்ய வேண்டும்-வீட்டு
வேலைகள் செய்து படித்திட வேண்டும்.

4. தேய்த்துக் குளித்திட வேண்டும்-நன்கு
தோய்த்த உடைகள் உடுத்திட வேண்டும்.

5. உள்ளதை உண்டிட வேண்டும்-உங்கள்
பள்ளிக்குப் பாங்குடன் சென்றிட வேண்டும்.

6. நேரத்தில் வகுப்புற வேண்டும்-ஆசான்
கூறிய வற்றைக் குறிக்கொள்ள வேண்டும்.

7. பாடத்தில் கருத்துற வேண்டும்-உங்கள்
கூடப் படிப்போ ரிடத்தன்பு வேண்டும்.

8. விட்டபின் வீடுற வேண்டும்-மாலைத்
தட்டில்லா மல்விளை யாடிட வேண்டும்.

9. மாலைக் கடன் ஆற்ற வேண்டும்-தீபம்
சாலவே ஏற்றி முன் உட்கார வேண்டும்.

10. ஊன்றிப் படித்திட வேண்டும்-வருத்தம்
தோன்றினும் சோராமல் பயின்றிட வேண்டும்.

11. உணவுகொண் டுலவிட வேண்டும்—இறையைப்
பணிவாகத் துதித்துப் படுத்திட வேண்டும்.

12. விடியும்போ தெழுந்திட வேண்டும்—கடவுள்
அடிகளை அன்புடன் துதிசெய்ய வேண்டும்.

—வித்துவான் ம. பெரியசாமிப் பிள்ளை

உற	சாலவே	சோராமல்	இறை
தீபம்	ஆசான்	உலவிடல்	நாட்கடன்
ஆற்ற	விளம்பு	அடிகளை	பாங்குடன்
தேய்	மாணவர்	துதிசெய்	குறிக்கொள்ளல்
தோய்	பணிவாக		

அருஞ்பதவுரை

நாட்கடன் - தினசரி வேலை. விளம்பு - சொல்லு. அடி - பாதம். இறை - கடவுள். பணிவாக - வணக்கமாக. சோராமல்- களைக்காமல். ஆசான் - உபாத்தியாயர், குரு. ஊன்றி - கருத்தாக, கவனமாக. ஆற்ற - செய்ய. கடன் - தவருமல் செய்ய வேண்டிய காரியம். விடுக்காமல் - விடாமல். செய்கடன்-செய்ய வேண்டிய காரியம். சால - நன்ருக. தட்டில்லாமல் - தடையில்லாமல்.

பயிற்சி

தேய், தோய். காலை, காளை. பணி, பனி:—இச்சொற்களைத் தனித்தனி வாக்கியத்தில் அமைத்துக் கூறு.

கேள்விகள்

1. காலையில் எழுந்ததும் செய்யவேண்டிய வேலைகள் யாவை? மாலையில் செய்யவேண்டிய வேலைகள் யாவை?
2. பாடங்களை எவ்வாறு படித்துப் பயிலவேண்டும்?
3. கூடப் படிப்போரிடத்தில் எப்படி இருக்கவேண்டும்?



7. அறிவுள்ள ஒரு முயல்

1. ஒரு காட்டில் ஒரு சிங்கம் வசித்து வந்தது. சிங்கம் மாமிச பட்சிணி. ஆதலால், அது தனக்கு இரையாக மற்ற மிருகங்களை அடித்துக் கொன்று தின்னும். ஆனால், அந்தச் சிங்கம் தனக்கு வேண்டிய இரைக்குத் தக்கபடி மிருகங்களைக் கொல்வதில்லை ; தன் எதிரில் தோன்றிய மிருகங்களை யெல்லாம் அடித்துக் கொன்றுவிடும்.

2. இவ்வாறு அது தினந்தோறும் பல மிருகங்களைக் கொன்று வந்தது. இதைக் கண்ட மற்ற மிருகங்கள் பயத்தால் நடுங்கின. அவைகளுக்கு என்ன செய்வதென்று விளங்கவில்லை. கடைசியாக அவைகள் ஒரு கூட்டம் கூடித் தமக்குள் முறைவைத்துக்

கொண்டு 'ஒவ்வொரு நாளும் ஒவ்வொன்ருகச் சிங்கத்திற்கு இரையாவது' என்று தீர்மானித்தன.

3. உடனே, அவைகள் ஒன்று சேர்ந்து சிங்கத்தினிடம் சென்று, "மிருகேந்திரனே, நீ நாள்தோறும் கணக்கில்லாத மிருகங்களைக் கொல்லுகிருய். அதனுல், காட்டிலுள்ள மிருகங்கள் எல்லாம் விரைவில் அழிந்துவிடும். கொஞ்ச நாளில் உனக்கும் இரைக்குப் பஞ்சம் வந்துவிடும். ஆதலால், நாங்கள் ஒரு முடிவு செய்திருக்கிரேம். நீ எங்களைக் கொல்லாதிருந்தால் நாங்களே ஒரு நாளைக்கு ஒருவராக வந்து உனக்கு இரையாவோம்," என்றன.

4. இந்த ஏற்பாட்டிற்குச் சிங்கமும் சம்மதித்தது. இதன்படியே ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மிருகம் சிங்கத்திற்கு இரையாகி வந்தது.

5. ஒரு நாள் ஒரு கிழ முயலின் முறை வந்தது. அன்று மற்ற மிருகங்கள் கிழ முயலிடம் சென்று, "இன்று உன் முறை. நீ காலதாமதம் செய்யாமல் சிங்கத்தினிடம் சென்று இரையாகவேண்டும்," என்று கூறின. அதைக் கேட்ட கிழ முயல் முதலில் கொஞ்சம் வருத்தம் அடைந்தது. ஆயினும், அது ஒரு உபாயத்தால் சிங்கத்தை வெல்லலாம் என்று எண்ணிக் காலதாமதம் செய்தது. அன்று வழக்கம்போல் சரியான வேளையில் ஒரு மிருகமும் வராமையால் சிங்கம் மிகுந்த கோபங் கொண்டிருந்தது.

6. அப்பொழுது முயல் பதுங்கிப் பதுங்கிச் சிங்கத்தினிடம் சென்றது. அதைக் கண்ட சிங்கம்

கோபத்துடன், "இன்று உன் முறையா?" என்று கேட்டது. முயல் நடுங்கிக் கொண்டே, "ஆமாம், ஆண்டவனே!" என்றது. உடனே சிங்கம், "நீ ஏன் என் பசி வேளைக்கு வராமல் நேரங் கழித்து வந்தாய்?" என்றது. முயல், "ஐயனே, நான் உங்கள் பசிவேளைக்கு முன்பே வந்துகொண்டிருந்தேன். வழியில் வேறொரு சிங்கம் வந்தது. அதைக் கண்டு பயந்து ஒரு புதரில் பதுங்கி யிருந்தேன். அது போயின பின்பே நான் வெளிப்பட்டு இங்கு வந்தேன். அதனால் நேரம் ஆகிவிட்டது. அதற்காக என்னை மன்னிக்க வேண்டும்," என்றது.

7. அதைக் கேட்டவுடன் சிங்கம் கடுங்கோபம் கொண்டு, "என்னைத் தவிர இந்தக் காட்டில் வேறொரு சிங்கமும் இருக்கிறதா? அதை நீ எனக்குக் காட்டு வாயா?" என்றது. முயல், "ஆமாம், அரசே! நான் வேறொரு சிங்கத்தைக் கண்டேன். அது இருக்கும் இடமும் எனக்குத் தெரியும். நீங்கள் என்னுடன் வந்தால் நான் அதை உங்களுக்குக் காட்டுவேன்," என்றது. சிங்கம், "இதோ வருகிறேன். அந்தச் சிங்கத்தைக் காட்டு," என்று கூறிப் புறப்பட்டது.

8. முயல் சிங்கத்தை அழைத்துச் சென்று சேறும் நீரும் உள்ள ஒரு கிணற்றைக் காட்டி, "அந்தச் சிங்கம் இதனுள்ளேதான் இருக்கிறது," என்றது. உடனே, சிங்கம் எட்டிப் பார்த்தது. கிணற்று நீரில் அதன் உருவம் தெரிந்தது. அது அவ்வுருவத்தை வேறொரு சிங்கம் என்று நினைத்து, அதைக்

கொல்லுவதற்காகக் கடுங்கோபத்துடன் அதன்மேல் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தது.

9. கிணற்றில் சேறு மிகுதியாக இருந்ததனுல் சிங்கம் அதில் அழுந்தி மேலே ஏறிவர முடியாமல் சில நாள் இருந்து அங்கேயே இறந்தது. இதை அறிந்த மற்ற மிருகங்கள் அதிக மகிழ்ச்சி யடைந் தன ; தங்களேச் சிங்கத்தினிடமிருந்து காப்பாற்றிய முயலேக் கொண்டாடின.

10. சிங்கம் முயலேவிட எத்தனேயோ மடங்கு பலமுள்ளது ; உருவத்திலும் மிகப் பெரியது. ஆயி னும், முயலின் தந்திரத்தால் கிணற்றில் விழுந்து உயிரிழந்தது. ஏன்? அதன் அறிவின்மையால் அல்லவா?

'புத்திமான் பலவான் ஆவான்'

முறை	நேரம்	கடுங்கோபம்
இரை	தக்கபடி	பாய்ச்சலாக
முடிபு	நடுங்கின	கொண்டாடின
பஞ்சம்	மன்னித்தல்	தீர்மானித்தன
பதுங்கி	தினந்தோறும்	மாமிச பட்சிணி
உபாயம்	விளங்கவில்லே	

அருஞ்பதவுரை

முறை - வரிசை, ஒழுங்கு. பஞ்சம் - உணவு கிடைக் காமை. உபாயம் - தந்திரம். தீர்மானித்தன - முடிவு செய்தன. தீர்மானம் - முடிவு. மாமிச பட்சிணி - மாமிசம் தின்னும் பிராணி.

பயிற்சி

கூட்டமாக, சிங்கம், உபாயத்தால், தினந்தோறும், இரை - இச்சொற்களைப் பின்வரும் வாக்கியங்களில் ஏற்றவாறு சேர்த்துப் படி.

1. கிழ முயல் சிங்கத்தை —— கொன்றது.
2. பூனைக்கு எலி ——.
3. சந்தையில் —— இருக்கும்.
4. —— காட்டில் வாழும்.
5. —— பாடம் படி.

கேள்விகள்

1. மிருகேந்திரன் என்று எதற்குப் பெயர்?
2. கிழமுயல் சிங்கத்தைப் பார்த்து என்ன சொல்லிற்று?
3. சிங்கம் ஏன் கிணற்றில் குதித்தது?
4. இக்கதையால் விளங்கும் நீதி என்ன?



8. நாய்

1. பூனை, நாய் முதலிய மிருகங்களை நாம் வீட்டில் வளர்க்கலாம். அதனால், அவைகளுக்கு வீட்டு மிருகங்கள் என்று பெயர். சிங்கம், புலி முதலிய மிருகங்கள் வீட்டில் வளர்க்கக் கூடாதவை. அவை காட்டில் வசிக்கும். அதனால், அவைகளுக்குக் காட்டு மிருகங்கள் என்று பெயர்.

2. நாய் வீட்டு மிருகங்களில் ஒன்று. அதற்கு நீண்ட உடலும், மெலிந்த கால்களும், மடிந்த காதுகளும், வளைந்த வாலும் உண்டு. அதன் மார்பு உயர்ந்தும் வயிறு குறுகியும் இருக்கும். அதன் முகம் கூர்மையானது.

3. நாய் தண்ணீர் குடிக்கும்போது நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அது ஆடுமாடுகளைப்போல்

உறிஞ்சிக் குடிப்பதில்லை; நாக்கினுல் நக்கிக் குடிக்கிறது. ஏன்? அதன் மூக்குத் துவாரங்கள் வாயின் பக்கத்தில் இருக்கின்றன. அது உறிஞ்சிக் குடித்தால் தண்ணீர் மூக்கில் ஏறிவிடும். அதனுல்தான் நாய் தண்ணீரை நக்கிக் குடிக்கின்றது.

4. நாயின் முன் கால்களில் நான்கு விரல்களும் பின் கால்களில் ஐந்து விரல்களும் உண்டு. விரலின் நுனியில் கூர்மையான பெரிய நகம் உண்டு. ஆயினும் நாய் நடக்கும்போது நகம் பூமியில் படுவதால் தேய்ந்து மழுங்கி விடுகிறது.

5. நாய் ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்துக்குப் போகவேண்டுமானுல் நடந்து செல்லாது; ஓடும். ஏன்? அதன் தேகம் அதிக கனமில்லாமலும் கால்கள் உயரமாகவும் இருப்பதனுல் அதற்கு ஓடுதல் எளிதாக இருக்கிறது.

6. அது நீண்டதூரம் போகும்போது நாக்கைத் தொங்கவிட்டுக்கொண்டே ஓடும். அப்பொழுது அதன் நாக்கிலிருந்து நீர் சொட்டுச் சொட்டாக விழும். ஏன் இவ்வாறு நீர் சொட்டுகிறது? நாம் வேகமாய்ச் சென்ருல் நமது உடம்பில் வியர்வை உண்டாகிறதல்லவா? அவ்வாறே நாய் ஓடும்போது அதற்கு வியர்வை உண்டாகிறது. ஆனுல், வியர்வை நீர் அதன் உடலில் தோன்றுவதில்லை; நாக்கின் வழியாக வெளிவருகிறது. அதனுல்தான் அதன் நாக்கிலிருந்து நீர் சொட்டுகிறது.

7. நாயின் நாக்கு மிகவும் மெலிந்தும் வழவழப்

பாகவும் இருக்கும். அதன் பற்கள் கூர்மையானவை. முன்வாய்ப் பற்களில் மேல் வரிசையில் இரண்டும், கீழ் வரிசையில் இரண்டும் மிகவும் கூர்மையாகவும் சிறிது நீண்டும் வளைந்தும் இருக்கும். நாய் கடிக்கும் போது இந்தப் பற்கள் அழுந்துவதனால்தான் பலத்த காயம் உண்டாகிறது.

8. நாயின் முக்கியமான ஆகாரம் மாமிசம். ஆயினும், அது சோற்றையும் தின்னும். எச்சில் இலைகளில் உள்ள சோற்றைத் தின்பதற்கு நாய்கள் ஒன்றோடொன்று சண்டையிட்டுக் கொள்வதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். நாய்க்கு எலும்பைக் கடிப்பதில் மிகவும் பிரியம். அதனாலேயே, 'கடிக்க வரும் நாய்க்கு எலும்பைப் போடு' என்னும் பழமொழி உண்டாயிற்று. நாய்க்குச் சந்தோஷம் உண்டாகும் போது தன் வாலை ஆட்டும்; கோபம் வந்தால் பல்லைக் காட்டி உறுமும்.

9. நாயைச் சிலர் விளையாட்டுக்காக வளர்க்கிறார்கள்; சிலர் தங்கள் வீட்டைக் காப்பதற்காக வளர்க்கிறார்கள்; சிலர் மந்தையைக் காப்பதற்காக வளர்க்கிறார்கள்; சிலர் வேட்டையாடுவதற்கு உதவியாக வளர்க்கிறார்கள். நாய் தன்னை வளர்ப்பவரிடம் மிகவும் விசுவாசமாக இருக்கும்; வளர்ப்பவன் தன்னை அடித்தபோதிலும் தன் வாலை ஆட்டி அன்பைக் காட்டும்.

நக்கி	உறுமும்	விசுவாசம்
மடிந்த	வியர்வை	வழவழப்பு
உறிஞ்சி	வேட்டை	வீட்டுமிருகம்
சொட்டு	தேய்ந்து	காட்டுமிருகம்

அரும்பதவுரை

விசுவாசம் - நன்றி மறவாமை. சொட்டு - துளி. எளிதாக - சுலபமாக.

பயிற்சி

(1) அவர் என்பது ஒரு சொல். அ, வ, ர் என்பன தனித் தனி எழுத்துக்கள். இம்மாதிரியே வீடு, தமிழ், விருந்து, வழக்கம் என்ற சொற்களிலுள்ள எழுத்துக்களைத் தனித்தனியே எடுத்துக் கூறு.

(2) மன்தனி ணேதன் ன்றேகிடுவி

இவ்வெழுத்துக்களைச் சரியான வரிசையில் கூட்டிச் சொற்களாகச் சொல்.

கேள்விகள்

1. நாயிடத்தில் உள்ள சிறந்த குணம் என்ன ?

2. நாயினுல் நமக்கு என்ன உபயோகம் ?

3. நாய் எப்போது வாலை ஆட்டும்? கோபம் வந்தால் என்ன செய்யும்?

9. ஓநாயும் கழுதையும்

படங்களைப் பார்த்துக் கதையைச் சொல்லு :



குறிப்பு: (1) ஒரு கழுதை தன்னை ஒரு ஓநாய் தாக்க வருதலைப் பார்த்தல். (2) கழுதை நொண்டி நடத்தல். (3) ஓநாய் கழுதை நொண்டுவதேன் எனக் கேட்டல். (4) கழுதை தன் பின்னங்கால் காயமடைந்திருப்பதாகக் கூறல். (5) அதைப் பார்ப்பதற்கு ஓநாய் கழுதையின் பின்னங்காலருகே செல்லுதல். (6) கழுதை ஓநாய்க்குப் பலமாக ஒரு உதை கொடுத்துவிட்டு ஓடுதல்.

10. தண்ணீர்

1. நாம் உலகத்தில் உயிரோடு வாழ்வதற்குச் சில பொருள்கள் முக்கியமானவை. நாம் சுவாசிப்பதற்குக் காற்று வேண்டும்; குடிப்பதற்குத் தண்ணீர் வேண்டும்; உண்பதற்கு உணவு வேண்டும்; உடுப்பதற்கு உடை வேண்டும்; வசிப்பதற்கு இடம் வேண்டும்.

2. இவற்றுள் நமக்குப் பலவகையிலும் உதவியாக இருப்பது எது? தண்ணீர் அல்லவா? தண்ணீர் பருகவும் சமையல் செய்யவும் உதவுகிறது. தண்ணீர் இல்லாவிட்டால் நமது உடையையும் உடம்பையும் சுத்தமாக வைத்துக்கொள்ள முடியுமா? பயிர் பச்சைகள் சாகுபடி செய்ய முடியுமா? முடியாது.

3. இவ்வளவு உபயோகமுள்ள தண்ணீர் நமக்கு எங்கிருந்து கிடைக்கிறது? ஆறு, குளம், குட்டை, கிணறு இவற்றிலிருந்து கிடைக்கிறது. சில ஊர்களில் குழாய்களிலிருந்தும் தண்ணீர் கிடைக்கும். இந்தக் குழாய்களில் வரும் தண்ணீரும் பெரிய கிணறுகள் அல்லது குளங்களிலிருந்தே வருகிறது. ஆனால், இவைகளில் எல்லாம் தண்ணீர் எப்படி வந்தது என்று உங்களுக்குத் தெரியுமா? இவற்றிலெல்லாம் தண்ணீர் இருப்பதற்கு மழைதான் காரணம். மழை இல்லாவிட்டால் ஒன்றிலும் தண்ணீர் இராது; தானியங்கள் விளையா; எங்கும் பஞ்சம் உண்டாகிவிடும்.

4. இம்மழை எவ்வாறு உண்டாகிறது என்று பார்ப்போம். கொஞ்சம் தண்ணீரை ஒரு கருங்கல்லில் தெளியுங்கள். சிறிது நேரம் கழித்து அங்குப் பார்த்தால் தண்ணீர் அப்படியே இருக்குமா? ஆடையைத் தோய்த்துப் பிழியும்போது ஆடை ஈரமாக இருக்கிறது. ஏன்? ஆடையில் தண்ணீர் இருப்பதனுல் அல்லவா? ஆடை காய்ந்தவுடன் தொட்டுப் பார்த்தால் ஈரம் தோன்றுகிறதா?

5. கல்லில் தெளித்த நீரும் ஆடையிலிருந்த நீரும் எங்கே போயிற்று? அவைகளிலிருந்த நீர் சூரியனுடைய வெப்பத்தால் ஆவியாக மாறிவிட்டது. சூரிய வெப்பம் காற்ருேடு கலந்திருக்கிறது. அதனுல் காற்றடித்தாலும் ஈரம் உலர்ந்து போகிறது. ஆகையால், நீர் சூரியவெப்பத்தால் ஆவியாக மாறும் என்று தெரிகிறது அல்லவா? இந்த ஆவிக்கு நீராவி என்று பெயர்.

6. கொதிக்கும் நீருக்குமேலே ஒரு கற்பலகையைப் பிடியுங்கள். சிறிது நேரத்தில் கற்பலகையில் சிறு நீர்த்துளிகளைக் காண்பீர்கள். இந்த நீர்த்துளிகள் எங்கிருந்து வந்தன? கொதிக்கும் நீரிலிருந்து உண்டான நீராவியே கற்பலகையில் படிந்து அதில் உள்ள குளிர்ச்சியால் நீர்த்துளிகளாக மாறிற்று. இதனுல் நீராவி குளிர்ந்தால் நீராக மாறும் என்று தெரிந்து கொள்ளுகிருேம்.

7. நீராவியை நாம் கண்ணுல் காணமுடியாது. ஆயினும், அது மிகவும் நுட்பமான நீர்த்துளிகளாக

இருக்கும்போது நாம் காணலாம். அடுப்பில் தண்ணீர் காயும்போதும் சோறு சூடாக இருக்கும்போதும் புகைபோல 'ஆவி' வருவதை நீங்கள் பார்த்திருப் பீர்கள். வெந்நீரிலும் சுடு சோற்றிலும் உண்டாகும் நீராவியே இவ்வாறு சிறு நீர்த்துளிகளாகிப் புகை போல் கண்ணுக்குத் தெரிகிறது.

8. சூரியன் பெரிய நெருப்பு உருண்டை என்று உங்களுக்குத் தெரியுமல்லவா? சூரிய வெப்பத்தால் சமுத்திரம், ஆறு முதலியவற்றில் உள்ள நீர் ஆவி யாகிக் கொண்டே இருக்கிறது. நீராவி காற்றைவிட இலேசானது; ஆகையால், மேலே செல்லுகிறது. மேலே சென்ற நீராவி குளிர்காற்றுப் பட்டவுடன் சிறு நீர்த்துளிகளாக மாறி ஒன்ருகச் சேருகிறது. அதைத் தான் நாம் மேகம் என்கிரும்.

9. மேகமும் காற்றைவிட இலேசானது. ஆத லால், அது ஆகாயத்தில் மிதக்கிறது; காற்று வீசுவ தனல் பல திசைகளிலும் செல்லுகிறது; அவ்வாறு செல்லும்போது மிகுந்த குளிர் காற்றுப் பட்டவுடன் பெரிய நீர்த்துளிகளாகிக் கீழே விழுகிறது. அது தான் மழை.

10. மழை பெய்யாவிட்டால் உலகத்தில் தண் ணீரே கிடைக்காது. தண்ணீர் இல்லாவிட்டால் மனி தர்களும் மற்றப் பிராணிகளும் உயிரோடு வாழ முடியாது; பயிர் பச்சைகள் விளையா. அதனல்தான் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐந்து முக்கியமான பொருள்களில் தண்ணீரையும்

ஒன்ருகச் சேர்த்திருக்கிருர்கள். இந்த ஐந்து பொருள்களுக்கும் **பஞ்சபூதங்கள்** என்று பெயர்.

உடு	ஆடை	இலேசு	கற்பலகை
பிழி	கம்பி	உலகம்	சமுத்திரம்
துளி	பருகு	நுட்பம்	பஞ்சபூதம்
ஆவி	குழாய்	சாகுபடி	பயிர்பச்சை
தோய்	மேகம்	காய்தல்	குளிர்காற்று

அரும்பதவுரை

பஞ்சபூதம் - நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐந்து பெரும்பொருள். பருகு - குடி. பஞ்சம் - உணவுப் பொருள் இல்லாமை. நுட்பமான - மிகச் சிறிய.

எதிர்ப்பதங்கள்

வெந்நீர் × தண்ணீர். வெப்பம் × குளிர்ச்சி. இலேசு × கனம்.

பயிற்சி

பொருத்தமாகச் சேர்த்துப் படி :

தண்ணீருக்குக் காரணம்	இலேசானது.
மழை இல்லாவிட்டால்	மழையாகப் பெய்கிறது.
நீராவி	மழை.
மேகமே	தானியங்கள் விளேயா.

கேள்விகள்

1. நாம் உயிரோடு வாழ்வதற்கு வேண்டிய முக்கியமான மூன்று பொருள்கள் யாவை?
2. பஞ்ச பூதங்கள் என்பன யாவை?
3. நீராவி என்ருல் என்ன? மேகம் என்பது யாது?
4. மேகம் எப்பொழுது மழையாகப் பெய்யும்?
5. தண்ணீர் நமக்கு என்னென்ன விதங்களில் உபயோகப் படுகிறது?

11. தமிழ் நாடு

1. காவிரி தென்பெண்ணை பாலாறு தமிழ்
கண்டதோர் வையை பொருனை நதி—என
மேவிய யாறு பலவோ டத்திரு
மேனி செழித்த தமிழ் நாடு.

2. முத்தமிழ் மாமுனி நீள்வரை யேநின்று
மொய்ம்புறக் காக்கும் தமிழ்நாடு—செல்வம்
எத்தனை உண்டு புவிமீதே அவை
யாவும் படைத்த தமிழ் நாடு.

3. கல்வி சிறந்த தமிழ் நாடு புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ் நாடு—நல்ல
பல்வித மாயின சாத்திரத்தின் மணம்
பாரெங்கும் வீசும் தமிழ் நாடு.

4. வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ் நாடு—நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரம்என் றோர்மணி
யாரம் படைத்த தமிழ் நாடு.

—பாரதியார்

புவி	மேனி	மேவிய	வான்புகழ்
வரை	மணி	மாமுனி	மொய்ம்புற
பார்	ஆரம்	சாத்திரம்	முத்தமிழ்

அரும்பதவுரை

பொருநை - தாமிரபர்ணி. யாறு - ஆறு. முத்தமிழ் மாமுனி - அகத்தியர். வரை - பொதியமலை. மொய்ம்பு - வலிமை அல்லது செழுமை. வள்ளுவர் - திருவள்ளுவர். மணி ஆரம் - முத்து மாலை.

பயிற்சி

கோடுகள் உள்ள இடங்களில் ஏற்ற சொற்களை வைத்துப் படி.

1. நாம் பேசும் ——— தமிழ்.
2. நாம் வசிப்பது ——— ———.
3. திருவள்ளுவர் ஒரு ——— ———.

கேள்விகள்

1. இப்பாட்டில் வரும் மலை, ஆறுகள் இவற்றின் பெயர்களைக் கூறு.
2. தமிழ் நாட்டில் பிறந்த சிறந்த புலவர்கள் யாவர்?
3. பாரதியார் மணியாரம் என்று எதைப் புகழ்கிறார்?



12. கோழி

1. கோழி என்பது வீட்டில் வளர்க்கக் கூடிய ஒரு பறவை. நீரில் வசிக்கும் ஒருவகைக் கோழி உண்டு. அதற்கு நீர்க்கோழி என்று பெயர். காட்டிலும் கோழி வசிக்கும். அதற்குக் காட்டுக் கோழி என்று பெயர். காட்டில் வசிக்கும் கோழிக்குக் கானக்கோழி என்றும் பெயர் வழங்குகிறது. வான் கோழி, நெருப்புக்கோழி என வேறு சில வகைக் கோழிகளும் உண்டு.

2. கோழியின் உடல் முழுவதும் இறகுகள் ஒன்றுன்மேல் ஒன்றுக மூடியிருக்கும். அதற்கு இரண்டு இறக்கைகள் உண்டு. இறக்கைகளுக்குச் சிறகுகள் என்று பெயர். சிறகில் பல இறகுகள் உண்டு. இவை ஒன்றன்மேல் ஒன்றுக இருப்பதால் சிறகை விரிக்கும்போது அது ஒரு விசிறிபோல் தோன்றும். பிற பறவைகளைவிடக் கோழி கன

மானது. ஆகையால், அதனுல் அதிக உயரம் பறக்க முடியாது.

3. கோழியின் அலகுகள் மிகவும் குட்டை யாக இருக்கும். மேல் அலகின் அடிப்புறத்தில் சிறிய மூக்குத் துவாரங்கள் உண்டு. கோழிக்கு வெளிக் காதுகள் இல்லை; ஆனுல் சிறிய காதுத் துவாரங்கள் மட்டும் உண்டு. இவை மெல்லிய இறகுகளால் மூடப் பட்டிருக்கும்.

4. கோழியின் பாதத்தில் உள்ள விரல்கள் முன்னுல் மூன்றும் பின்னுல் ஒன்றுமாக அமைந் திருக்கும். விரல்களின் நுனியில் உறுதியான வளைந்த நகங்கள் உண்டு. அந்த நகங்களால்தான் கோழி குப்பைகளைச் சீக்கிறது.

5. கோழியின் ஆகாரம் பூச்சி, புழு முதலி யவை. அது நெல் முதலிய தானியங்களையும் தின் னும். கோழி வளர்ப்பவர்கள் பிசைந்த தவிட்டையும் கொத்தின மாமிசத்தையும் அதற்கு உணவாக வைப் பார்கள்.

6. ஆண் கோழிக்குச் சேவல் என்றும் பெண் கோழிக்குப் பெட்டை என்றும் பெயர்.

7. சேவல் பார்வைக்கு மிகவும் அழகாய் இருக்கும். அதன் தலையில் சிவப்பு நிறமுள்ள சீப்புப் போன்ற சதை உண்டு. அதற்குக் கொண்டை என்று பெயர். அதன் வாயின் அடிப்புறத்தில் தாடைகள் தொங்கும். அவைகளும் சிவப்பு நிறம் உடையவை. சேவலின் வாலில் உள்ள இறகுகள்

நீண்டு வளைந்திருக்கும். அவை நீலநிறம் உள்ளவை; மிகவும் அழகாக இருக்கும்.

8. சேவல் விடியற்காலையில் கூவும். அது ஒவ்வொரு நாளும் சிறிதும் தவருமல் ஒரே நேரத்தில் கூவுதல் மிகவும் வியக்கத்தக்க செய்தியாகும். கோழி கூவினவுடனே கிராமத்து மக்கள் எழுந்திருந்து தங்கள் தங்கள் வேலைக்குப் போவார்கள்.

9. பெட்டை சேவலைவிடக் குட்டையாக இருக்கும். அதன் கொண்டையும் வால் இறகும் மிகவும் குட்டையானவை. அதன் கால்களும் குறுகியவை.

10. பெட்டைக் கோழி தினம் ஒரு முட்டை யாகச் சுமார் இருபது முட்டைகள் இடும். கோழி வளர்ப்பவர்கள் இந்த முட்டைகளைச் சேர்த்து வைப் பார்கள். பெட்டை முட்டையிடுதல் ஓய்ந்தவுடன் கொக்-கொக்-கொக் என்று கத்திக்கொண்டிருக்கும். இதற்குக் கொக்கரித்தல் என்று பெயர். அப்பொழுது முட்டைகளை எல்லாம் ஒரு கூடையில் பரப்பி அவற்றின்மேல் அந்தக் கோழியை உட்கார வைப் பார்கள். கோழியும் ஆவலோடு தன் இறகுகளால் முட்டைகளை மூடிக்கொண்டு அவற்றின்மேல் உட் கார்ந்திருக்கும். இதற்குத்தான் அடைகாத்தல் என்று பெயர்.

11. பெட்டைக்கோழி ஏறத்தாழ இருபது நாள் அடைகாக்கும். இதற்குள் முட்டையில் உள்ள கரு குஞ்சாகி வளர்ந்திருக்கும். அப்பொழுது கோழி

தன் அலகினுல் முட்டைகளைக் கொத்தி உடைக்கும். உடனே குஞ்சுகள் வெளிவரும்.

12. பெட்டை தன் குஞ்சுகளை மிகவும் கவனமாகப் பாதுகாக்கும். கோழிக் குஞ்சுகள் மேய்ந்து கொண்டிருக்கும்போது பருந்து முதலிய பறவைகள் அவற்றின்மேல் பாய்ந்து கால்களால் பிடித்துக் கொண்டுபோவது உண்டு. அவ்வாறு பிடிக்க வருவதைக் கோழி பார்த்தால் உடனே கொக்கரித்துக் குஞ்சுகளைப் பக்கத்தில் வருவித்து அவற்றைத் தன் சிறகுகளால் மூடிக்கொள்ளும்.

இறகு	தாடை	கொத்துதல்
சிறகு	பருந்து	கொக்கரித்தல்
அலகு	பற்றுதல்	குறுகியவை
கானம்	கிளம்புதல்	அடைகாத்தல்

அரும்பதவுரை

கிளம்புதல் - எழும்புதல். பற்றிக்கொண்டு - பிடித்துக் கொண்டு. ஆவல் - ஆசை.

பயிற்சி.

1. கோழி என்பது ஒரு பிராணியின் பெயர். வீடு என்பது ஒரு இடத்தின் பெயர். அலகு என்பது ஒரு உறுப்பின் பெயர்—இம்மாதிரி, பெயர்களைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப் படும்.

2. கோடுகள் உள்ள இடங்களில் ஏற்ற பெயர்ச் சொற்களை அமைத்துப் படி :

நான் ——— வளர்க்கிறேன்.
சேவலின் ——— கொண்டை உண்டு.
——— விளையாடுகிறுன்.
——— அழுகிறது.
உபாத்தியாயர் ——— இருக்கிருர்.

கேள்விகள்

1. கோழியில் பல வகைகள் யாவை?
2. சிலர் சேவலை எதற்காக வளர்க்கிருர்கள்?
3. சேவலிடத்தில் உள்ள ஒரு வியக்கத்தக்க செய்கை என்ன?
4. கோழியின் விரல்கள் எவ்வாறு அமைந்திருக்கின்றன?
5. அடைகாத்தல் என்ருல் என்ன?

13. வாசுகியம்மையார்

1. முற்காலத்தில் நமது தமிழ் நாட்டில் கல்வியில் தேர்ச்சிபெற்ற பல புலவர்கள் இருந்தார்கள். அவர்களுள் திருவள்ளுவர் மிகச் சிறந்தவர்.

2. திருவள்ளுவர் நமது தாய் மொழியாகிய தமிழில் ஒரு சிறந்த நூல் இயற்றினர். அதுதான் திருக்குறள் என்பது. அதனை நீங்கள் மேல் வகுப்பில் படிப்பீர்கள். திருக்குறள் மிக உயர்ந்த நூல். அதில் மக்கள் அறிய வேண்டிய எல்லாப் பொருள்களும் கூறப்பட்டுள்ளன. அதன் உயர்வை அறிந்த மேல் நாட்டார் அதனைத் தமது மொழியில் மொழிபெயர்த்துப் படித்துவருகின்றனர்.

3. சிறந்த புலவராகிய திருவள்ளுவர் நெசவுத் தொழிலையே மேலானது என்று கருதினர். அதனல், அத்தொழிலையே செய்து அதனல் வரும் ஊதியத்தைக் கொண்டு வாழ்ந்துவந்தனர்.

4. அத்தகைய திருவள்ளுவருடைய மனைவியின் பெயரே வாசுகி அம்மையார் என்பது. வாசுகியம்மை மிகச் சிறந்த பெண்மணி; கணவன் குறிப்பறிந்து ஒழுகுபவர்; கணவனுக்குச் செய்ய வேண்டிய பணிவிடையைத் தவருது செய்பவர்; நற்குணம் வாய்ந்தவர்; கற்பிற் சிறந்தவர். இத்தகைய மனைவியோடு திருவள்ளுவர் இல்லறத்தை மேற்கொண்டு இனிது வாழ்ந்து வந்தனர்.

5. வாசுகியம்மையாரது கற்பின் மேன்மையை அறியும் முனிவர்களும் அவரைப் போற்றுவார்கள். இதற்கு ஆதரவாக ஒரு வரலாறும் உண்டு.

6. ஒரு காட்டில் கொங்கணவர் என்ற பெயருள்ள ஒரு முனிவர் தவம் செய்துவந்தார். அவர் சில நாட்களில் உணவின் பொருட்டு ஊருக்குள் வந்து சில வீடுகளில் பிச்சைகேட்டு உணவு பெற்றுச் செல்வார்.

7. அம்முனிவர் ஒருநாள் காட்டைவிட்டு நாட்டுக்கு வந்தார். வரும் வழியில் ஆகாயத்தில் பறந்து கொண்டிருந்த ஒரு கொக்கு அவர்மேல் எச்சம் இட்டது. உடனே, அவர் கோபங்கொண்டு மேலே பார்த்தார். அவர் பார்வையினுலேயே கொக்கு எரிந்து சாம்பலாயிற்று. பின்பு அவர் ஊருக்குள் வந்து வாசுகி அம்மையார் மனையை அடைந்து பிச்சை கேட்டார்.

8. அப்பொழுது அம்மையார் தம் கணவனுருக்குப் பணிவிடை செய்துகொண் டிருந்தார். ஆதலால், முனிவர் குரல் கேட்டவுடனே வராமல் சற்றுத் தாமதித்துப் பிச்சையிட வந்தனர். அதனுல் முனிவர் கோபங்கொண்டு அம்மையாரை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தனர்.

9. உடனே வாசுகியம்மையார் அவரது செருக்கை அடக்க எண்ணிக் "கொக்கென்று நினைத்தனையோ, கொங்கணவா ?" என்று கூறினர். அதைக் கேட்ட கொங்கணவர் திடுக்கிட்டார்; 'காட்டிலிருந்து

வரும் வழியில் நடந்த நிகழ்ச்சியை அம்மையார் வீட்டிலிருந்தே அறிந்து கொண்டதோடு வேருெரு வருக்கும் தெரியாத நமது பெயரையும் தெரிந்து கொண்டாரே!' என்று பெருவியப்படைந்தார். அத் தகைய சக்தி அம்மையாருக்கு உண்டானது அவரது கற்பினுலேயே என்றறிந்து பாராட்டினுர். கடைசி யாக முனிவர் வாசுகி அம்மையாரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு அவரிட்ட பிச்சையைப் பெற்றுத் தம் இருப்பிடம் சென்ருர்.

மொழி	ஊதியம்	ஏற இறங்க
தவம்	நிகழ்ச்சி	இல்லறம்
பிச்சை	வரலாறு	இருப்பிடம்
அச்சம்	செருக்கு	இயற்றினுர்
எச்சம்	ஆதரவு	திடுக்கிட்டார்
சாம்பல்	மேன்மை	மேல் நாட்டார்
பார்வை	பணிவிடை	நெசவுத் தொழில்
முனிவர்	பெண்மணி	மொழிபெயர்த்தல்
சிறந்த	நற்குணம்	பாராட்டினுர்

அருஞ்பதவுரை

அச்சம் - பயம். ஆதரவு - உதவி. ஊதியம் - வரும்படி. வரலாறு - கதை. செருக்கு - கர்வம். பணிவிடை - வேலே.

பயிற்சி

1. கொக்கு பறந்தது. இவ்வாக்கியத்தில் 'கொக்கு' என்பது பெயரைக் குறிக்கும் சொல். ஆனல் பறந்தது என்பது கொக்கின் செய்கையைத் தெரிவிக்கும் சொல். இம்மாதிரியே, வந்தனர், செல்வார், பார்த்தார்—இவைகளும் செய்கையைக் குறிக்கும் சொற்கள். ஆகையால், செயலேக் குறிக்கும் சொல் வினைச்சொல் ஆகும். (வினை - செயல்.)

2. பின்வரும் வாக்கியங்களில் ஏற்ற வினைச்சொல்லைச் சேர்த்துப் படி :

1. திருவள்ளுவர் நெசவுத் தொழில் ——.

2. ஒரு கொக்கு கொங்கணவர் மேல் எச்சம் ——.

3. திருவள்ளுவர் திருக்குறள் ——.

4. உன் பாடங்களை நன்றாய் ——.

5. பெரியோர் சொல்வதை ——.

கேள்விகள்

1. திருவள்ளுவர் இயற்றிய நூல் எது ?

2. வாசுகி அம்மையாரின் நல்லியல்புகளைப் பற்றி இரண்டு வாக்கியங்கள் எழுது.

3. கொங்கணவர் கொக்கை ஏன் எரித்தார்? எவ்வாறு எரித்தார் ?

4. வாசுகி அம்மையாரின் சக்தியைக் கொங்கணவர் எப்படி அறிந்தார் ?



14. இரயில் வண்டி

1. நாம் ஒரு ஊரிலிருந்து மற்ருெரு ஊருக்குச் செல்லவேண்டுமானுல் என்ன செய்கிருேம்? நம்மில் சிலர் நடந்து செல்லுகிருேம்; சிலர் வண்டிகளில் செல்லுகிருேம்.

2. வண்டிகள் பல வகைப்படும். சில வண்டிகள் மாடுகளால் இழுக்கப்படும்; அவைகளுக்கு மாட்டு வண்டி என்று பெயர். சில வண்டிகள் குதிரைகளால் இழுக்கப்படும். அவைகளுக்குக் குதிரை வண்டி எனப் பெயர். மோட்டார்கார் என ஒருவகை வண்டியும் உண்டு. அதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அதை இழுப்பதற்கு மாடும் குதிரையும் வேண்டியதில்லை. அது ஒருவகை எந்திரத்தினுல் இழுக்கப்படுகிறது.

3. மேலே உள்ள படத்தில் இருப்பது இரயில் வண்டி. அந்த வண்டியின் முன்னுல் புகை கிளம்புகிறதல்லவா? அதனுல் அதைப் ‘புகை வண்டி’ என்றும்

சொல்வதுண்டு. அதில்தான் தற்காலத்தில் மக்கள் மிகுதியாகப் பிரயாணம் செய்கிறுர்கள்.

4. இரயில்வண்டி என்பது ஒரே வண்டி அல்ல; பல வண்டிகள் சங்கிலிபோல் ஒன்றேடு ஒன்று தொடர்ந்திருக்கும். ஆகையால், அதை 'வண்டித் தொடர்' என்று சொல்லவேண்டும். மற்ற வண்டிகள் எல்லாம் மண்தரைமீது ஓடுகின்றன; ஆனுல், இரயில் வண்டியோ தண்டவாளத்தின்மேல்தான் ஓடும். தண்டவாளம் இரும்பினுல் செய்யப்பட்டது. அதற்கு ஆங்கிலத்தில் 'ரயில்' என்று பெயர். ஆதலால் தண்டவாளத்தின் வழியே ஓடும் வண்டி 'ரயில் வண்டி' என்றும் சொல்லப்படுகிறது.

5. இரயில் வண்டியை இழுப்பது என்ன தெரியுமா? நீராவியே இரயில் வண்டியை இழுக்கிறது. நீர் ஆவியாக மாறும்போது ஒரு அளவுள்ள தண்ணீர் அதைப் போல அநேக மடங்குள்ள ஆவியாக மாறும். இந்த நீராவிக்கு மிகுந்த சக்தி உண்டு. அதனுல்தான் மிக அதிக பளுவான இரயில் வண்டியை இழுக்க நீராவி உபயோகப்படுகிறது.

6. இரயில் வண்டித் தொடரில் முதலில் இருப்பது எஞ்சின். எஞ்சினுக்குத் தமிழில் எந்திரம் என்று பெயர். இதில் பெரிய சக்கரங்கள் இருக்கும்; தண்ணீரை நிரப்புவதற்கு ஒரு பெரிய குழாய் போன்ற தொட்டி உண்டு. அதில் தண்ணீரை நிரப்பிச் சூடு படுத்தினுல் நீராவி உண்டாகும். இந்த நீராவியானது சக்கரத்தைத் தள்ளுவதற்கு ஏற்ற சில

ஏற்பாடுகள் எஞ்சினில் உண்டு. அதன்படி நீராவி சக்கரத்தைத் தள்ளும்போது சக்கரம் சுழன்று எஞ்சின் செல்லுகிறது. எஞ்சின் செல்லும்போது அதனோடு இணைக்கப்பட்ட மற்ற வண்டிகளும் செல்லுகின்றன.

7. நீராவியின் சக்தியால் சுழலக்கூடிய எஞ் சினை முதலில் அமைத்தவர் ஜேம்ஸ் வாட்டு என்ற ஆங்கில அறிஞர் ஆவர். நீராவி எந்திரத்தால் இரயில் வண்டிகளை ஓட்ட வழி கண்டுபிடித்தவர் ஜார்ஜ் ஸ்டீபன்ஸன் என்பவர். இவரும் ஒரு ஆங்கிலேயரே.

8. இரயில் வண்டி நிற்பதற்கு ஏற்பட்ட இடத் துக்கு 'ஸ்டேஷன்' என்று பெயர். இரண்டு மூன்று பாதைகள் சந்திக்கும் ஸ்டேஷன், 'ஜங்ஷன்' என்று சொல்லப்படும். ஸ்டேஷன் அதிகாரிக்கு 'ஸ்டேஷன் மாஸ்டர்' என்று பெயர்.

9. எஞ்சினில் இருந்து வண்டியைச் செலுத்து கிறவர் 'எஞ்சின் டிரைவர்' என்று கூறப்படுவார். வண்டித் தொடரின் கடைசி வண்டியில் ஒரு அதிகாரி இருப்பார். அவர் வண்டியின் பாதுகாப் புக்காக நியமிக்கப்பட்டவர். அதனால், அவருக்குக் 'கார்டு' என்று பெயர். அவர் டிரைவருக்கு உதவி யாக இருப்பவர். டிரைவர் வண்டியை நிறுத்துவ தற்கும் செலுத்துவதற்கும் கார்டின் உதவியும் அனு மதியும் வேண்டும்.

10. நாம் இரயிலில் பிரயாணம் செய்வதனால்

செலவு குறையும்; குறித்த இடத்துக்குச் சீக்கிரம் போய்ச் சேரலாம். நெல் முதலிய தானியங்களையும், ஆடு, மாடு முதலிய மிருகங்களையும், மற்றும் பல பொருள்களையும் அதன் மூலமாக வேறு இடங்களுக்கு அனுப்பலாம். அவை குறைந்த செலவிலும் விரைவாகவும் குறித்த இடத்துக்குப் போய்ச் சேரும்.

எந்திரம்	பளுவான	தண்டவாளம்
சங்கிலி	அனுமதி	புகைவண்டி
அறிஞர்	பிரயாணம்	வண்டித்தொடர்

அரும்பதவுரை

அனுமதி - உத்தரவு, சம்மதம். நியமித்தல் - ஏற்படுத்தல். பளுவான - கனமுள்ள. பிரயாணம் - ஒரு ஊரிலிருந்து மற்ெருரு ஊருக்குச் செல்லுதல்.

பயிற்சி

பின்வரும் சொற்களைச் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் காட்டு:

மோட்டார் கார், கிளம்புகிறது, தண்டவாளம், ஸ்டேஷன், எஞ்சின்.

கேள்விகள்

1. இரயில் வண்டி எதனுல் ஓடுகிறது? எதன்மீது ஓடுகிறது?
2. இரயில் வண்டியை உண்டாக்கியவர் யாவர்?
3. இரயில் வண்டி ஏற்பட்டதால் நமக்கு உண்டாகும் நன்மைகள் யாவை?
4. 'கார்டு' என்பவரின் வேலை என்ன?



15. வழிப்போக்கன்

1. வழிப்போக்கன் ஒருவன் மிகக்
களைப்படைந்தே வழியில்
செழிப்பான ஆலின்கீழ்
சில நிமிடம் இருந்தான்.

2. இருந்தவனும் அதனடியில்
இளங்காற்று வீச
வருந்தியதன் களைப்பறவே
மகிழ்வாகப் படுத்தான்.

3. படுத்தவுடன் அம்மரத்தில்
பாங்கான கனிகள்

அடுத்தடுத்தே உள்ளவற்றை
அதிசயித்துப் பார்த்தான்.

D3
0 31 (53
N56

4. "இவ்வால மரத்தினுக்கே
ஏற்றவையாம் கிளைகள்;
எவ்வாறும் பொருந்தியவையே
இதனுடைய இலைகள்.

5. ஒருகுறைதான் இம்மரத்தில்
உளதாகும்; அதுவும்
சிறுபழங்கள் பெருங்கிளையில்
சேரஇருப் பதுவே.

ஆவணக் காப்பகம்
சென்னை-600 008.
135330

6. மிகப் பெரிய மரத்தினுக்கு
மிகச்சிறிய கனிகள்
தொகைப்படவே படைத்த இறை
சொற்ப அறிவுடையோன்,"

7. என்றுமிக இகழ்ந்துரைத்தே
இருக்கின்ற சமயம்
அன்றுமிகப் பழுத்தகனி
அவன் தலையில் விழவே;

8. நோவடைந்தே, "ஐயோ! நான்
நுட்பஅறி வின்றி
ஆவதுணர் ஈசனையே
அதிகம் இகழ்ந் தேனே.

9. " சிறுபழத்தால் இவ்வளவு
வலியுளதேல், சிறியேன்
பெரும்பழமா யிருப்பின் அதன்
வலியும் பொறுப்பேனே !

10. யாவையும் அறிந்தவைக்கே
ஏற்றவகை யாக
யாவையும் படைத்தவற்றைக்
காத்திடுவான் இறைவன்,"

11. என்றுமிக அன்புடனே
ஈசனைத் துதித்தே
சென்றுதான் குறித்தஇடம்
செவ்விதாகச் சேர்ந்தான்.

—வித்வான் ம. பெரியசாமிப் பிள்ளை

குறை	களைப்பு	அதிசயித்து	அடுத்தடுத்து
சேர	சொற்பம்	படைத்தல்	வழிப்போக்கன்
நோவு	உளதேல்	செவ்விதாக	தொகைப்பட
ஈசன்	காத்திடல்	இளங்காற்று	இறை

அரும்பதவுரை

களைப்பற - களைப்பு நீங்க. இறை - இறைவன், கடவுள். நோவு - வலி. படைத்தல் - உண்டாக்குதல். நுட்ப அறிவு - புத்திக்கூர்மை. ஆவதுணர் ஈசன் - எதெது எவ்வாறு அமைய வேண்டுமென்பதை உணர்ந்த கடவுள்.

பயிற்சி

1. வழிப்போக்கன் சொல்லியது போல் வசனத்தில் சொல்லு :

(1) முதலில் அவன் கடவுளின் அறிவைப் பற்றி இகழ்ந்தது.

(2) பிறகு அவன் கடவுளைப் புகழ்ந்தது.

2. எதிர்ப்பதங்கள் கூறு :—சொற்பம், குறைவு, இகழ், சிறிய.

கேள்விகள்

1. வழிப்போக்கன் எதற்காக ஆல மரத்தின் கீழே தங்கினான் ?

2. அவன் படுத்திருக்கும்போது என்ன நேர்ந்தது ?

3. வழிப்போக்கன் தான் கடவுளை இகழ்ந்தது குற்றமென்று எவ்வாறு உணர்ந்தான் ?

4. யாவரையும் படைத்தவன் யார் ? அவன் எவ்வாறு அவற்றைக் காப்பாற்றுகிறான் ?



16. தென்னை

1. பிள்ளைகளே, நீங்கள் முன்னே நெற்பயிரைப் பற்றிப் படித்தீர்கள் அல்லவா? அதுபோன்ற பயிர்கள் எல்லாம் ஒரு ஆண்டுக்குமேல் உயிரோடு இரா. ஆனல், மரங்கள் பல ஆண்டுகள் உயிரோடிருக்கும். மரம் செடி கொடிகளும், பயிர் பச்சைகளும் உயிருள்ளவை. ஆயினும் அவை இடம்விட்டு இடம் நகரமாட்டா. அதனல், அவைகளுக்குத் **தாவரம்** என்று பெயர்.

2. தென்னை என்பது நீண்டு வளரும் மரம். இது பார்வைக்கு ஒரு பெரிய தூண்போலத் தோன்றும். பனை மரம், பாக்கு மரம், ஈச்ச மரம் இவைகள்

தென்னையின் இனத்தைச் சேர்ந்தவை. தென்ன மரம் சுமார் எழுபது அடி வரையில் உயர்ந்து வளரும்.

3. தென்னைக்குக் கிளைகள் இல்லை. அதன் உச்சியில் மட்டைகள் அடர்ந்திருக்கும். அவை நீண்டு வளைந்து நாலா பக்கத்திலும் பரவி யிருக்கும். தென்னமட்டை சுமார் ஆறு மாதங்களில் பழுத்து விழுந்துவிடும். மட்டை மரத்தோடு ஒட்டிக்கொண் டிருந்த இடம் பிறைபோலத் தோன்றும். பல மட்டை கள் விழுவதனுல் இம்மாதிரியான பல வடுக்கள் உண் டாகுமல்லவா? அவைகளே தென்ன மரத்தின் அடி முதல் நுனிவரையில் வரிசையாகத் தோன்று கின்றவை.

4. தென்னம்பூ பாளை என்று கூறப்படும். பாளையிலிருந்து காய்கள் உண்டாகும். தேங்காய்கள் மரத்தின் உச்சியில் குலைகுலையாகக் காய்த்திருப்பது பார்வைக்கு மிக அழகாகத் தோன்றும். மரத்தி லிருந்து பறிக்கும் தேங்காய் கனமான நாரினுல் மூடப் பட்டிருப்பதால் பெரிதாகத் தோன்றுகின்றது. கடை களில் விற்கப்படும் தேங்காய்கள் நார் உரித்தவை.

5. தேங்காய் நாரை உரித்தால் ஒரு கடினமான ஓடு தோன்றும். இந்த ஓட்டுக்குக் கொட்டங்கைச்சி என்று பெயர். அதன் உள்ளேதான் வெண்மையான பருப்பு இருக்கிறது. இந்தப் பருப்பையும் நாம் தேங் காய் என்றே சொல்லுகிறோம். முற்றின பருப்புக்குக் கொப்பரை என்று பெயர்.

6. இளந் தேங்காயில் நீர் நிரம்பி இருக்கும்.

அதற்கு இளநீர் என்று பெயர். இளநீர் இனிமையாக இருக்கும். அது நமக்குத் தாகத்தைத் தணித்துக்கொள்ள உதவும். இளநீர் உள்ள தேங்காயும் இளநீர் என்றே கூறப்படுகிறது. முற்றின தேங்காய்க்கு நெற்று என்று பெயர்.

7. தென்னை வளருவதற்கு நீர்வளம் உள்ள பூமி வேண்டும். அதனால், அது ஆற்றை அடுத்துள்ள இடங்களில் அதிகமாகப் பயிராகும். நன்செய் நிலங்கள் உள்ள கிராமங்களில் தென்ன மரங்கள் அடர்ந்த தோப்புக்களைக் காணலாம்.

8. தென்ன மரங்கள் பயிராக்குவது எப்படி என்று உங்களுக்குத் தெரியுமா? பூமியில் குழிகள் தோண்டி அதில் தென்ன நெற்றுக்களை ஊன்றி நீர் வார்த்து வந்தால், நெற்றின் மேற்புறத்திலிருந்து முளை கிளம்பிக் குருத்துக்கள் உண்டாகி வளரும். இதுதான் தென்னங்கன்று. தென்னங்கன்றைத் தென்னம்பிள்ளை என்று சொல்லுவது வழக்கம். தென்னம் பிள்ளைகளைப் பெயர்த்தெடுத்து வரிசையாகத் தோண்டப்பட்ட குழிகளில் குழிக்கு ஒன்றாக நட்டு எருவிட்டுத் தண்ணீர் ஊற்றிவருவார்கள். தென்னம் பிள்ளையும் தூண்போல உயர்ந்து வளர்ந்து தென்ன மரமாகும். தென்னமரம் ஐந்தாவது ஆண்டுக்குமேல் காய்க்கத் தொடங்கும்.

9. தென்ன மரத்தில் மனிதருக்குப் பயன் படாத பாகம் ஒன்றுமே இல்லை. உணவில் தேங்காயைச் சேர்ப்பது உண்டு. தேங்காய் கலந்த பதார்த்தம்

சுவையாய் இருக்கும். கொப்பரைத் தேங்காயிலிருந்து எண்ணெய் எடுப்பார்கள். அதற்குத் தேங்காய் எண்ணெய் என்று பெயர். தென்னை ஓலையைக் கீற்றுக முடைந்து வீட்டுக்கு மேல்கூரையாகப் போடுவார்கள். தேங்காய் நாரினுல் கயிறு திரிக்கலாம். தேர் வடமும் தேங்காய் நாரினுல் செய்யப்படுகிறது. ஓலையில் உள்ள ஈர்க்கு துடைப்பமாக உதவுகிறது. தென்ன மரத்தின் அடிப்பாகம் வீடு கட்டுவதற்குத் தூண்களாக உதவும்.

பாளை	நகர்தல்	பயிர்பச்சை
சீவி	தாவரம்	கொப்பரை
வடு	நெற்று	கடினமான
பிறை	குருத்து	கொட்டங்கைச்சி
ஈர்க்கு	துடைப்பம்	
பருப்பு	பதார்த்தம்	

அருஞ்பதவுரை

தாவரம் - மரம், செடி, கொடி, புல், பூண்டு. வடு - அடையாளம். பதார்த்தம் - சமைக்கப்பட்ட உணவுப் பொருள்.

பயிற்சி

1. தென்னமரத்தைப் பற்றி ஐந்து வாக்கியங்கள் கூறு.
2. இரு பொருள் கூறு :—திரி, வடு, கொப்பரை.
3. பொருள் மாறுபடுவதை விளக்கு :—கல், கள் ; கரி, கறி; குழி, குளி.

கேள்விகள்

1. தென்னமரம் நமக்கு எந்தெந்த வகையில் உதவுகிறது?
2. பாளை என்பது என்ன ?
3. இளநீர் என்ற பெயர் எப்படி ஏற்பட்டது ?

17. காந்தியடிகளும் குருடனும்

1. நமது நாடு இப்பொழுது சுதந்திரம் பெற்றுள்ளது. இதற்குக் காரணமா யிருந்தவர்களில் முதன்மையானவர் **மகாத்மா காந்தியடிகள்.** ஆகையால் காந்தியடிகளை நம் தேசப்பிதா என்று சொல்லுகிறேம்.

2. ஒரு சமயம் காந்தியடிகள் பீகாரில் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். கிராமம் கிராம மாகச் சென்று கூட்டங்களில் பேசி மக்களுக்கு அவர் களுடைய கடமைகளை எடுத்துக் கூறிவந்தார்.

3. ஒருநாள் மாலை காந்தியடிகள் ஒரு கிராமத் திலிருந்து மற்றொரு கிராமத்துக்கு மோட்டார் வண்டி

யில் போய்க் கொண்டிருந்தார். வழியில் ஒரு சக்கரம் பழுதாகி வண்டி நின்றுவிட்டது. வண்டியோட்டியும் காந்தியடிகளுடன் வந்த நண்பர்களும் சக்கரத்தைப் பழுதுபார்க்கும் வேலையில் ஈடுபட்டனர்.

4. காந்தியடிகள் வண்டியிலிருந்து இறங்கிச் சுற்று முற்றும் பார்த்தார். பாதையின் ஒரு ஓரத்தில் கையில் கோலூன்றிக் கொண்டு நின்ற ஒரு குருடன் மீது அவரது பார்வை விழுந்தது. அவனுக்கு ஏறத் தாழ எண்பது வயதிருக்கும். வழிப்போக்கர்களிடம் அவன் ஏதோ கேட்டுக்கொண் டிருந்தான். இரண் டொருவர் அவன் கேட்டதற்கு ஏதோ பதிலளித்தனர். பலர் அவன் கூறியதைக் கவனிக்காமல் தம் வழியே சென்றனர்.

5. அடிகள் அவனருகில் சென்று, "ஐயா, உமக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

6. அதற்குக் கிழவன், "மகனே! நான் பக் கத்துக் கிராமத்தில் வசிக்கிறேன். என் மனைவி மக்கள் எல்லாம் இறந்துவிட்டார்கள். இப்பொழுது எனக்குக் கடவுள் ஒருவரே துணை. நான் மகாத்மாஜி யின் புகழைப் பற்றிக் கேள்விப்பட் டிருக்கிறேன். அவர் இந்த வழியாகச் செல்லப் போகிறார் என்று கிராமத்தில் பேசிக்கொண்டார்கள். அவர் போய் விட்டாரோ, இனிமேல்தான் வருவாரோ, தெரியவில்லை. இந்தச் சிறு மூட்டையில், எனது சேமிப்புப் பணம் எல்லாம் இருக்கிறது. அவரைச் சந்திக்கும் பேறு எனக்குக் கிடைக்குமானால் அவருடைய பாதங்களில்

பணிந்து இந்தக் காணிக்கையைச் செலுத்த வேண்டு மென்பது என் ஆசை,'' என்று கூறினன்.

7. உருக்கமான அச்சொற்களைக் கேட்ட அடிகள், "ஐயா, தாங்கள் கூறியவற்றை இதுவரை எவன் கேட்டுக் கொண்டிருந்தானே, அவன்தான் காந்தி,'' என்ருர்.

8. இதைக் கேட்ட குருடன் மிக்க வியப்படைந் தான். உடனே அவன் அந்தப் பண முடிப்பை காந்தியடிகளின் கையில் கொடுத்துவிட்டு, அவரது பாதங்களில் பணிய விரும்பினன். ஆனல், அடிகள் அவனைத் தம் மார்புடன் அணைத்துக் கொண்டார்.

9. இறைவனின் திருவிளையாட்டைப் பாருங் கள் ! கண்ணிழந்த அந்தப் பக்தனின் கோரிக்கையை நிறைவேற்ற அல்லவா அவன் நின்ற இடத்திற்கு அருகே காந்தியடிகள் சென்ற மோட்டார் வண்டியின் சக்கரம் பழுதடைந்தது !

முதன்மை	கேட்டவண்ணம்	கோரிக்கை
தேசப்பிதா	எஞ்சியுள்ள	நிறைவேற்ற
பழுதாகி	காணிக்கை	கோலூன்றி
சுற்றுமுற்றும்	பணிந்து	

அரும்பதவுரை

தேசப்பிதா - நாட்டின் தந்தை. பழுதாகி - கெட்டுப்போய். பேறு - நல்வினை. காணிக்கை - பெரியோருக்கு அல்லது தெய் வத்துக்கு நாம் அன்புடன் கொடுக்கும் பொருள். கோரிக்கை - விருப்பம்.

பயிற்சி

பின்வரும் வாக்கியங்களில் ஏற்ற வினைச்சொல்லைச் சேர்த்துப் படி :

(1) காந்தியடிகளை நம் தேசப் பிதா என்று ——.

(2) இந்தச் சிறு மூட்டையில் பணம் ——.

(3) இதைக் கேட்ட குருடன் மிக்க வியப்பு ——.

(4) அடிகள் அக் குருடனைத் தம் மார்புடன் ——.

(5) மோட்டாரின் சக்கரம் அங்கே பழுதடைந்தது இறைவனின் ——.

கேள்விகள்

1. காந்தியடிகள் சென்ற மோட்டார் வண்டி ஏன் நின்றுவிட்டது ?

2. குருடன் காந்தியடிகளைச் சந்தித்து என்ன செய்ய விரும்பினான் ?

3. இறைவனின் திருவிளையாட்டு எது ?

18. தபாற் கடிதம்

[உரையாடல்]

தம்பி : அண்ணு ! இதோ, தபாற்காரர் ஒரு கடிதம் கொண்டு வந்து கொடுத்தார்.

அண்ணன் : எங்கே பார்க்கலாம். இது பட்டணத்துக் கடிதம் ; நமது மாமா நேற்று எழுதியிருக்கிருர்.

தம்பி : அண்ணு ! மாமா எழுதி யாரிடம் கொடுத்தார் ? தபாற்காரரிடமா?

அண்ணன் : இல்லே, இல்லே. அவர் நேற்று எழுதி, மாலேயில் சென்னேயில் உள்ள எழும்பூர் தபாலாபீசில் போட்டிருக்கிருர். அது இன்று காலேயில் 8-30 மணிக்கு நமது திருச்சிராப்பள்ளியில் உள்ள தெப்பக்குளம் தபாலாபீசில் வந்து சேர்ந்திருக்கிறது. அதைத்தான் தபாற்காரர் இப்போது கொண்டு வந்து கொடுத்தார்.

தம்பி : அண்ணு, இது என்ன ஆச்சரியமாய் இருக்கிறது! நீங்கள் இங்கிருந்துகொண்டே அதெல்லாம் எப்படித் தெரிந்து கொண்டீர்கள் ?

அண்ணன் : இதில் ஒன்றும் வியப்பு இல்லே, தம்பி ; இந்தக் கடிதத்தைப் பார்த்தே அதெல்லாம் தெரிந்து கொள்ளலாம். இதோ, பார் ; இரண்டு முத்திரைகள் இருக்கின்றன. இவைகளில் ஒன்று எழும்பூரிலுள்ள தபாலாபீசில் போட்ட முத்திரை.

அதில் அந்தத் தபாலாபீசின் பெயரும், முத்திரை போட்ட தேதியும், நேரமும் குறிக்கப்பட்டிருக்கின்றன. மற்ருென்று நமது ஊரில் தெப்பக்குளம் தபாலாபீசில் போட்ட முத்திரை. இதிலும் இந்தத் தபாலாபீசின் பெயரும் முத்திரை போட்ட தேதியும் நேரமும் குறிக்கப்பட்டுள்ளன.

தம்பி : அண்ணு, இந்தச் செய்தி இப்போது தான் தெரிந்தது. இது சரி ; இந்தக் கடிதம் சென்னேயிலிருந்து நமது ஊருக்கு வந்து சேர்ந்திருக்கிறதென்று முன்னே சொன்னீர்களே ; இதை அங்கிருந்து இங்கே கொண்டு வந்தவர் யார்?

அண்ணன் : சென்னேயிலிருந்து ஒருவர் இங்கு வரவேண்டுமாஞல் எவ்வளவு செலவு பிடிக்கும்? இரயில் வண்டியில் ஏறிவந்தாலும் ஆறேழு ரூபாய் செலவாகுமே. இந்தக் கடிதத்திற்கு முக்காலணுதான் செலவு. இந்தச் செலவில் ஒருவர் அங்கிருந்து இங்கு வர முடியுமா ?

தம்பி : பின்னே எப்படி அண்ணு, கடிதம் அங்கிருந்து இங்கு வந்தது ?

அண்ணன் : தம்பி, சொல்கிறேன், கேள். இரயில் வண்டித் தொடரில் ஒரு வண்டி தபாலுக்காக ஏற்பட்டிருக்கும். அதற்கு 'மெயில்வான்' என்று பெயர். தபாலாபீசில் போடும் கடிதங்களே எல்லாம் தபாற் சேவகர்கள் முத்திரையிட்டு ஒன்று சேர்த்துப் பைகளில் போட்டுக் கட்டிக் கொண்டுபோய் அந்த வண்டியில் சேர்த்து விடுவார்கள்.

தம்பி : அந்த வண்டியிலிருந்து கடிதம் தபாலாபீசுக்கு எப்படி வரும் ?

அண்ணன் : தம்பி, அவசரப்படாதே. சொல்லுகிறேன் ; கேள். அந்த 'மெயில்வானில்' சில உத்தியோகஸ்தர்கள் இருப்பார்கள். அவர்கள் ஒவ்வொரு ஊருக்கும் போகவேண்டிய கடிதங்களைப் பிரித்துப் பைகளில் போட்டுக் கட்டி வைப்பார்கள். ஒவ்வொரு நிலையத்திலும் இரயில் வண்டி நிற்கும்போது அவர்கள் அந்த ஊர்ப் பையை அங்கு வந்திருக்கும் தபாற் சேவகரிடம் ஒப்படைப்பார்கள்.

தம்பி : அவர் அதை என்ன செய்வார் ?

அண்ணன் : அவர் அம்மூட்டையை அவ்வூர்த் தபாலாபீசுக்குக் கொண்டு போவார். அங்கு அதைப் பிரித்துக் கடிதங்களுக்கு முத்திரையிடுவார்கள். தபால்காரரர் கடிதங்களை மேல் விலாசப்படி அவரவர்கள் வீட்டில் கொண்டுபோய்க் கொடுப்பார்.

தம்பி : சரி, அண்ணா. இரயில் மூலமாகக் கடிதங்கள் போனால் இரயில் ஸ்டேஷன் உள்ள ஊர்களுக்குத்தானே தபால் போகும் ? இரயில் இல்லாத கிராமங்களுக்குக் கடிதம் எப்படிப் போய்ச் சேரும் ?

அண்ணன் : கிராமங்களுக்கும் கடிதம் போகும். ஆனால், கொஞ்சம் நாளாகும். ஒவ்வொரு பெரிய கிராமத்திலும் தபாலாபீசு இருக்கும். நகரத்தில் உள்ள பெரிய தபாலாபீசிலிருந்து ஆள் மூலமாவது, வண்டிகள் மூலமாவது அந்தக் கிராமத் தபாலாபீசுக்குக் கடிதங்கள் வரும். அங்கிருந்துதான் மற்றக்

கிராமங்களுக்குத் தபாற் சேவகர் கடிதங்களைக் கொண்டு போவார்.

கிராமம்	தேதி	தபாலாபீசு
பட்டணம்	ஒப்பித்தல்	வண்டித்தொடர்
நகரம்	மூலமாக	மேல்விலாசம்
சேவகர்	முத்திரை	நூற்றுக்கணக்கான
அவசரம்	தபாற்காரர்	குறிக்கப்பட்டுள்ள
பிரித்து		

அரும்பதவுரை

முத்திரை - அடையாளம். சேவகர் - வேலைக்காரர். சேவகம் - வேலை. மூலமாக - வழியாக. குறிக்கப்பட்டு - எழுதப்பட்டு.

பயிற்சி

கிராமம், பட்டணம், தபாலாபீசு இவைகளைப்பற்றி இரண்டிரண்டு வாக்கியங்கள் கூறு.

கேள்விகள்

1. ‘மெயில்வான்’ என்று எதற்குப் பெயர்?

2. தபால் முத்திரையில் என்னென்ன குறிக்கப்பட்டிருக்கும்?

3. இரயில் இல்லாத கிராமங்களுக்குத் தபாற் கடிதங்கள் எப்படிப் போய்ச் சேரும்?

19. ஒரு சாதுரியமான தீர்ப்பு

ஒரு சமயம் நான்குபேர் ஒன்றுகூடி ஒரு ஊரிலிருந்து மற்ருெரு ஊருக்கு நடந்து சென்று திரும்பி வந்து கொண்டிருந்தனர். வருகின்ற வழியில் ஓர் இடத்தில் ஒரு முடிச்சு கிடந்தது. அதனைக் கண்ட அவர்கள் அது என்ன முடிச்சு என்றறிய ஆவல் கொண்டு அங்கு நின்றனர்.' அவர்களில் ஒருவன் குனிந்து அதை எடுத்தான். முடிச்சு கனமாக இருந்தமையால் அவன், 'இது பண முடிச்சாக இருக்கும் போல் தோன்றுகிறது,' என்று கூறி அவிழ்க்கத் தொடங்கினுன். மற்றவர்களும், 'உள்ளே என்ன இருக்கிறது பார்ப்போம்,' என்று ஆவலுடன் அவனைச் சுற்றி நின்றுகொண்டு கவனித்தார்கள். முடிச்சில் நிரம்பப் பணம் இருந்தது.

பணம் என்ருல் யாருக்கும் ஆசை உண்டாகும் அல்லவா ? அந்த நால்வரில் ஒவ்வொருவரும் அந்தப் பணம் முழுவதையும் தாமே அடைய வேண்டும் என எண்ணினர். அவ்விதம் ஒருவர் அடைய மற்றவர்கள் விட்டுவிடுவார்களா ? ஆதலால், அவர்கள் நால்வரும் அதனைச் சமமாகப் பங்கிட்டுக் கொள்வதெனத் தீர்மானித்தனர். ஆனுல், அவ்வாறு பங்கிட்டுக் கொள்வது தங்கள் ஊர் சேர்ந்ததும் நடைபெற வேண்டும் என முடிவு கட்டினர்.

பின்னர், அவர்கள் புறப்பட்டுத் தம் ஊரை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். சிறிது தூரம்

சென்றபின் அவர்களுக்குப் பசி எடுத்தது. ஆதலால் அவர்கள் வழியில் ஓர் சிற்றூரில் தங்கி, அங்கே இருந்த ஓர் கிணற்றில் இறங்கிக் கைகால் கழுவிக் கொண்டு உணவருந்தலாம் என எண்ணினுர்கள். அந்தக் கிணற்றில் ஒவ்வொருவராகத்தான் இறங்குதல் கூடும். அதனுல், அவர்கட்கு ஒருவரை விட்டு ஒருவர் பிரிய மனம் இல்லை. ஏன்? பணமுடிச்சின் மேலேயே ஒவ்வொருவருக்கும் கவனம் இருந்தது. கடைசியாக, அவர்கள் அருகில் இருந்த ஒரு கடைக்குச் சென்று கடைக்காரரிடம் பணமுடிச்சைக் கொடுத்து, "நாங்கள் நால்வரும் வந்து கேட்டால் இதைத் திருப்பிக் கொடுங்கள்," என்று கூறிக் கொடுத்துவிட்டுக் கிணற்றிற்கு வந்தனர். வந்தவர்கள் கிணற்றில் இறங்கிக் கைகால் கழுவிக்கொண்டு கரை ஏறிக் கட்டமுதை அருந்தினர்.

உடனே அவர்கள் வெற்றிலை பாக்குப் போட்டுக் கொள்ள எண்ணினுர்கள். அதனுல் தங்களுள் ஒருவனைப் பார்த்து, "நீ அந்தக் கடைக்குச் சென்று, பண முடிச்சிலிருந்து ஒரு அணு எடுத்து வெற்றிலை பாக்கு வாங்கிக்கொண்டு வா," என்று கூறினர். அவனும் சென்று பண முடிச்சைக் கொடுக்கும்படி கடைக்காரரைக் கேட்டான். கடைக்காரர், "மற்ற மூவருடனும் நீ வந்தால்தான் பண முடிச்சைக் கொடுப்பேன்," என்றுர். அவன், "மூவரும்தான் என்னை அனுப்பினுர்கள். வேண்டுமானுல், அவர்களை அங்கிருந்தே சொல்லச் செய்கிறேன்," என்று சொல்லி

கடையில் நின்றபடியே அவர்களை நோக்கிக் "கடைக்காரர் தரமாட்டேன் என்கிறார்," எனக் கூவினான். அவர்கள், "ஐயா, கடைக்காரரே, கொடுங்கள், கொடுங்கள்," என்றார்கள். எனவே, கடைக்காரர் முடிச்சை எடுத்துக் கொடுத்தார். அவன் அதனைப் பெற்றுக்கொண்டு மற்ற மூவரும் அறியாமல் மெல்ல நழுவி மறைந்து சென்றுவிட்டான்.

மூவரும் சற்று நேரம் காத்திருந்தனர். வெற்றிலை பாக்கு வாங்கச் சென்றவன் வரவில்லை. ஆதலால், அவர்கள் அந்தக் கடைக்குச் சென்று விசாரித்தனர். கடைக்காரர், "அவர் சற்று நேரத்திற்கு முன்பே இங்கிருந்து போய்விட்டாரே. நீங்கள் சொன்னபடியே பணமுடிச்சையும் அவரிடம் கொடுத்துவிட்டேனே," என்றார். அவர்கள் "மோசம் போனோமே!" என்று எண்ணி எண்ணி வருந்திச் சுற்று முற்றும் தேடினர். ஆள் அகப்படவில்லை. ஆதலால், கடைக்காரரே இதற்குப் பொறுப்பு என்று கருதி, அவ்வூர் நீதிபதியிடம் அவர்மீது வழக்குத் தொடர்ந்தனர்.

நீதிபதி இரு கட்சியாரையும் விசாரித்தார். வழிப்போக்கர் மூவரும் பணமுடிச்சின் வரலாற்றைக் கூறி, "நாங்கள் நால்வரும் கேட்டால்தான் கடைக்காரர் பணமுடிச்சைக் கொடுக்கவேண்டும். ஒருவரிடம் கொடுத்தது தவறு. ஆதலால் பணத்துக்குப் பொறுப்பு அவரே," என்றார்கள். கடைக்காரரும் நடந்ததைக் கூறினர். நீதிபதி கடைக்காரர்மீது தவறில்லை என அறிந்துகொண்டார். ஆயினும்,

வழிப்போக்கர், ' நாங்கள் நால்வரும் சேர்ந்து கேட்கா திருக்க ஒருவர் கேட்டவுடன் கொடுத்தது கடைக்கார ரின் தவறே' என்று வற்புறுத்திக் கூறினர். நீதிபதி சற்று ஆலோசித்து, " நீங்கள் நால்வருமாகப் போய்க் கடைக்காரரிடம் கேட்பீர்களானுல் அவர் உங்களிடம் பணமுடிச்சைக் கொடுத்துவிடுவார்," என்று தீர்ப்புக் கூறினுர்.

வழிப்போக்கர் திடுக்கிட்டனர் ; நால்வரும் ஒரு சேரப் போய்க் கேட்பது எப்பொழுது ? கடைக்கார ரிடமிருந்து பண முடிச்சைப் பெறுவது எப்போது ? நீதிபதியின் சாதுரியமான தீர்ப்பினுல் கடைக்காரர் சங்கடத்திலிருந்து விடுபட்டார். வழிப்போக்கர் மூவரும் **கைக்கெட்டியது வாய்க்கெட்டாமல் போனது**பற்றி வருந்தித் தம் வழியே ஏகினர்.

நழுவுதல்	முடிவுகட்டுதல்	குனிந்து
அருகில்	வற்புறுத்துதல்	கனமாக
ஒருசேர	வெற்றிலைபாக்கு	அவிழ்த்தல்
சாதுரியம்	கால்நடையாக	நிரம்ப
திடுக்கிடல்	கட்டமுது	விடுபடுதல்
தீர்மானித்தல்	கட்சிக்காரர்	

அரும்பதவுரை

சாதுரியம் - சாமர்த்தியம். வற்புறுத்துதல் - கட்டாயப் படுத்துதல். தீர்ப்பு - வழக்கைப்பற்றிய முடிபு. கட்டமுது - கட்டுச்சோறு.

பயிற்சி

1. ஆள், கை, கால்—இப்பெயர்கள் ஒவ்வொன்றும் ஒரு ஆள், ஒரு கை, ஒரு கால் என ஒவ்வொரு பொருளேயே குறிக்

கும். இம்மாதிரி ஒரு பொருளைக் குறிக்கும் பெயர் ஒருமைப் பெயர் ஆகும்.

2. ஆட்கள், கைகள், கால்கள்—இப்பெயர்கள் ஒவ்வொன்றும் பல ஆட்கள், பல கைகள், பல கால்கள் எனப் பல பொருள்களை, அதாவது ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களைக் குறிக்கும். இவ்வாறு பல பொருள்களைக் குறிக்கும் பெயர் பன்மைப் பெயர் ஆகும்.

3. பெயர்ச்சொல்லைப் போலவே வினைச்சொல்லிலும் ஒருமை, பன்மை உண்டு. ஆள் நிற்கிறான். இதில் 'நிற்கிறான்' என்ற வினைச்சொல் ஒருவருடைய செயலைக் குறிக்கிறது. இம்மாதிரி ஒரு பொருளின் செயலைக் குறிக்கும் வினை ஒருமை வினை ஆகும்.

4. ஆட்கள் நிற்கிறார்கள். இதில் 'நிற்கிறார்கள்' என்ற வினைச் சொல் பலருடைய செயலைக் குறிக்கிறது. இம்மாதிரி பல பொருள்களின் செயலைக் குறிக்கும் வினை பன்மை வினை ஆகும்.

5. கீழ்க்கண்ட வாக்கியங்களில் உள்ள பெயர்ச் சொற்களையும், வினைச்சொற்களையும் தனித்தனியே எடுத்துக் காட்டி அவை ஒருமையா, பன்மையா என்பதையும் கூறுக :

(1) பணம் என்றால் எல்லோருக்கும் ஆசை உண்டாகும்.
(2) ஒருவன் முடிச்சுடன் ஓடிவிட்டான்.
(3) மூவரும் மோசம் போயினர்.
(4) நீ அவர்களைக் கூப்பிடு.
(5) கடைக்காரர் 'நான் கொடுக்கமாட்டேன்' என்றார்.

கேள்விகள்

1. வழிப்போக்கர்கள் பண முடிச்சை யாரிடம் கொடுத்து வைத்தார்கள் ? என்ன சொல்லிக் கொடுத்தார்கள் ?

2. வெற்றிலை பாக்கு வாங்கச் சென்றவன் செய்த மோசம் யாது?

3. நீதிபதி என்ன முடிவு கூறினார் ? ஏன் அவ்வாறு கூறினார் ?

20. மழை

1. மழையே மழையே வருவாயே
வளரும் பயிரைத் தருவாயே.

2. மின்னி இடித்துப் பொழிவாயே
வீதிகள் எங்கும் வழிவாயே.

3. வானம் கருக்க வருவாயே
வந்தே வெள்ளம் தருவாயே.

4. தெருக்கள் நிறைய ஓடுவாயே
தெளிவாய்ப் பாட்டுப் பாடுவாயே.

5. வெயிலின் கொடுமை யொழியவே
மிகுந்த நீரைப் பொழிவையே.

6. ஆலங் கட்டி தருவாயே
ஆனந் தந்தந் தருள்வாயே.

7. கப்பல் செய்து விடுவேனே
கையால் மெல்லத் தொடுவேனே.

8. கப்ப லோடும் ஓடுவேன்
களிப்பாய்ப் பாடி ஆடுவேன்.

9. மெள்ள வெளியிற் குதிப்பேனே
விளையாட் டாக மிதிப்பேனே.

10. நனைந்து நனைந்து மகிழ்வேனே
நாளும் உனையே புகழ்வேனே.

11. மலையில் விழுந்து வழிவாயே
மக்கள் மகிழப் பொழிவாயே.

12. ஆற்றில் குளத்தில் நிறைவாயே
அடுத்த வயலில் நிறைவாயே.

—வித்வான் N. கனகராசய்யர்

மின்னி	நனைந்து	தெளிவாய்	இடித்து
கொடுமை	அருள்வாய்	கருக்க	களிப்பாய்
பொழிவாய்	வெள்ளம்	வழிவாய்	ஆலங்கட்டி

அரும்பதவுரை

களிப்பு - சந்தோஷம். இடித்து - இடியோசை செய்து. கொடுமை - கஷ்டம்.

பயிற்சி

1. கோடிட்ட இடங்களில் ஏற்ற பெயர்ச் சொற்களை அமைத்துப் படி :
   (1) ஆற்றில் ——— நிறைந்து ஓடுகிறது.
   (2) ——— மின்னுகிறது.
   (3) ——— இடிக்கிறது.
2. ஏற்ற வினைச் சொற்களை அமைத்துப் படி :
   (1) மழை ——. (2) வெயில் கடுமையாக ——.
   (3) வானம் ———.

கேள்விகள்

1. மழை பெய்யும்போது சிறுவர்கள் என்னென்ன விளையாட்டு விளையாடுவார்கள் ?

2. மழையினால் உண்டாகும் நன்மைகள் என்ன ?

21. சிங்கமும் சுண்டெலியும்

படங்களைப் பார்த்துக் கதையைச் சொல்லு :



குறிப்பு : (1) ஒரு காட்டில் ஒரு சிங்கம் தூங்கிக் கொண்டிருத்தல். (2) ஒரு சுண்டெலி அதன்மீது ஓடுதல். (3) சிங்கம் விழித்துச் சுண்டெலியைப் பிடித்துக் கொள்ளுதல். (4) சிங்கம் தன்னைக் கொல்லாது விட்டால் அதற்குத் தகுந்த பதிலுபகாரம் தான் செய்யக்கூடுமெனச் சுண்டெலி சொல்லுதல். (5) சிங்கம் வலையில் அகப்பட்டுக் கொள்ளுதல். (6) சுண்டெலி வலையைக் கடித்து ஒரு பெரிய துவாரம் உண்டாக்குதல். (8) சிங்கம் வலையினின்று வெளிப்பட்டுச் சுயேச்சையாகத் திரிதல்.

22. பாரி

1. முற்காலத்தில் நமது தமிழ் நாட்டில் பாரி என்னும் சிற்றரசர் ஒருவர் இருந்தார். அவருக்கு வேள்பாரி என்றும் பெயர். வேள் என்றால் உபகாரம் என்று பொருள். அவருடைய நாடு பறம்பு நாடு. பறம்பு நாடு என்பது தமிழ் நாட்டில் ஒரு சிறு பகுதி. அதில் முந்நூறு சிற்றூர்கள் இருந்தன.

அந்த நாட்டில் ஒரு மலை உண்டு. அதற்கும் பறம்பு மலை என்று பெயர்.

2. வேள்பாரி பறம்பு மலையில் கோட்டை கட்டிக்கொண்டு அதிலிருந்து தமது முந்நூறு ஊர்களையும் ஆண்டு வந்தார். பாரி ஒரு சிறந்த வீரர்; தம் குடிகளிடம் மிகவும் அன்புடையவர்; கற்றவர்களிடம் மிகுந்த ஆசை உடையவர்; எல்லாப் பிராணிகளிடத்திலும் கருணை யுடையவர்; மரம், செடி முதலிய தாவரங்களிடத்திலும் இரக்கம் காட்டுவார்.

3. ஒரு சமயம் பாரி தேரில் ஏறிக்கொண்டு காட்டுக்குச் சென்றார். அங்கு ஒரு முல்லைக்கொடி வளர்ந்திருந்தது. கொடி படர்வதற்கு ஒரு கொம்பு வேண்டும் அல்லவா? முல்லைக்கொடி படர அங்கு யாதொரு கொம்பும் இல்லை. அதனால், அது ஆடி அசைந்துகொண்டிருந்தது. அதைக் கண்டு வேள் பாரி மிகவும் மனம் இரங்கினார்.

4. அவர், "ஐயோ! இந்த முல்லைக் கொடி அசைந்து அசைந்து ஆடுகிறதே! படர்வதற்குக் கொம்பு இல்லாமல் இவ்வாறு செய்கிறது போல் இருக்கிறது," என்று நினைத்தார்; தாம் ஏறி வந்த தேரை அதன் அருகே நிறுத்தி முல்லைக் கொடியை எடுத்துத் தேரில் விட்டு, 'இந்தத் தேரின்மேல் இக்கொடி படர்ந்து வளரட்டும்,' என்று கூறி மகிழ்ச்சி அடைந்தார். பின்பு அவர் தம் அரண்மனைக்கு நடந்து சென்றார்.

5. பாரியின் கருணையைப் பார்த்தீர்களா?

இத்தகைய அருள் மிகவும் சிறந்ததல்லவா ? அதனால் அவருடைய புகழ் தமிழ்நாடு முழுவதும் பரவியது. பல கல்விமான்கள் அவரிடம் வந்தார்கள். பாரி அவர்களுடைய கல்வி யறிவைக் கண்டு மகிழ்ந்து அவர்களுக்குத் தம் ஊர்களைப் பரிசாகக் கொடுத்து வந்தார். நாளடைவில் முந்நூறு ஊர்களையும் பரிசிலர் பெற்றனர். என்ன கொடை! ஊர் ஊராகக் கொடுப்பது மிகவும் அருமையல்லவா ? கொடையிற் சிறந்த பாரி, 'வள்ளல்' என்று பெயர் பெற்றார். சிறந்த கொடையாளிக்கு வள்ளல் என்று பெயர்.

6. பாரிக்கு இரண்டு பெண்மக்கள் இருந்தார்கள். அவர்கள் நன்றாகப் படித்தவர்கள். அவர்களுக்குப் 'பாரி மகளிர்' என்றே பெயர் வழங்கியது.

7. கபிலர் என்னும் புலவர் பாரிக்குச் சிறந்த நண்பர். அவர் நமது வள்ளலுக்குத் துணையாகப் பலகாலம் அவரிடம் இருந்தனர். ஔவையாரும் பாரியினிடம் அடிக்கடி வருவது உண்டு. ஔவையாருடைய கல்வியறிவையும் பெருமையையும் அறிந்து பாரி அவருக்கு மிகுந்த உபசாரம் செய்வார் ; பரிசு அளிப்பார்.

9. பாரி இறந்த பின்பு பாரிமகளிரைக் கபிலர் சிலகாலம் ஆதரித்து வந்தார். பின்னர், ஔவையார் அவர்களை அழைத்துச் சென்று ஒரு சிறந்த அரசனுக்குத் திருமணம் செய்து வைத்தனர்.

வேள்	கோட்டை	நாளடைவில்	பாரி
சிற்றூர்	வழங்கியது	மகளிர்	ஆதரித்து
கல்விமான்	கொடை	பரிசிலர்	உபகாரம்

அரும்பதவுரை

கொம்பு - சிறு கிளை. கொடை - பொருள் கொடுத்தல். மகளிர் - பெண்கள். வழங்கியது - சொல்லப்பட்டது.

பயிற்சி

1. இப்பாடத்திலுள்ள படத்தில் நீ பார்க்கும் செய்தி களைப் பற்றிச் சில வாக்கியங்கள் கூறு.

2. பாரி ஒரு சிறந்த வீரர்.—இது ஒரு வாக்கியம் அல்லவா? இவ்வாக்கியத்தின் முடிவில் ஒரு புள்ளி இருப்பதைக் கவனியுங் கள். இதற்கு முற்றுப் புள்ளி என்று பெயர். ஒரு வாக்கியத்தின் முடிவில் முற்றுப்புள்ளி வைக்கப்படும்.

3. வாக்கியங்கள் முடியும் இடங்களில் முற்றுப்புள்ளிகள் வை:

அங்கு ஒரு முல்லைக்கொடி வளர்ந்திருந்தது அது படர் வதற்குக் கொம்பு இல்லை பாரி வள்ளல் தம் தேரை அக்கொடி படர்வதற்காக அதனருகே நிறுத்திவிட்டார்.

கேள்விகள்

1. வேள்பாரி என்பவர் யார்? அவர் வள்ளல் என்று பெயர் பெற்றது எவ்வாறு?

2. பாரியின் நண்பர் யார்?

3. பாரி மகளிரைப் பற்றி உனக்குத் தெரிந்ததைக் கூறு.

23. குடிசைத் தொழில்

குடிசைத் தொழில்களைச் செய்வோம்—நாட்டுக்
குடிகள் வளர்ந்து கொழித்திட உய்வோம்.

1. அடிமைத் தொழிலை மறப்போம்—நமக்
காக வுழைத்துப் பொருளாற் சிறப்போம் ;
மிடிமை பறந்திட வேண்டும்—நம்மை
வேறுள நாட்டவர் போற்றவும் வேண்டும்.

2. பருத்தியைத் திருத்தமாய் நூற்போம்—வரும்
பலவகை நூல்களின் பயன்களை ஏற்போம் ;
பொருத்தமாய் ஆடைகள் நெய்வோம்—பிறர்
போர்த்தும் உடுத்தும் புகழ்ந்திடச் செய்வோம்.

3. ஆடுகள் மாடுகள் வளர்ப்போம்—அவை
அளித்திடும் பொருள்களாற் செல்வத்தை வளர்ப்
[போம் ;
தாழ்வறத் தேனீக்கள் வளர்ப்போம்—அவை
தந்திடும் தேனினல் உடல் நலம் வளர்ப்போம்.

4. பாய்களைப் பலபடி நெய்வோம்—பிறர்
பார்த்து மயங்கவே பலதொழில் செய்வோம் ;
நோய்களை வென்றுநம் நாட்டில்—நாம்
நூறுண்டு வாழும் வழியினைக் காண்போம்.

—வித்வான் ம. பெரியசாமிப் பிள்ளை

தேனீ	ஆடைகள்	திருத்தமாய்
பலபடி	போர்த்து	கொழித்திட
மிடிமை	ஏற்போம்	பொருத்தமாய்
குடிகள்	நெய்வோம்	குடிசைத் தொழில்
மயங்கும்	போற்றவும்	அடிமைத் தொழில் !

அரும்பதவுரை

மிடிமை - தரித்திரம். பலபடி - பலவிதமாக. நூருண்டு - நூறு வருஷம். போற்ற - கொண்டாட. கொழித்திட - செழிக்க.

கேள்விகள்

1. கைத்தொழில் என்ருல் என்ன ?
2. கைத்தொழிலால் தேசத்துக்கு விளேயும் நன்மை யாது?
3. உனக்குத் தெரிந்த குடிசைத் தொழில்களேக் கூறு.

24. கிராம அதிகாரிகள்

[கந்தனும் அவன் தந்தையும் வீதி வழியே போகின்றனர். அப்பொழுது கிராம முனிசீப்பு, தலையாரி, வெட்டியான் இவர்கள் ஓர் வீட்டின் முன் நிற்கின்றனர். அவர்களைச் சுட்டிக் கந்தன் கேட்கிறான்.]

கந்தன் : அப்பா, இவர்கள் யார் ?

தந்தை : கந்தா, இவர்களில் முன்னே நிற்பவர் கிராம முனிசீப்பு. அவருக்குப் பக்கத்தில் நிற்பவன் தலையாரி. கையில் தடி வைத்துக்கொண்டு நிற்பவன் வெட்டியான்.

கந்தன் : ஏன் அப்பா, இவர்கள் இங்கே நிற்கிறார்கள் ?

தந்தை : இவர்கள் வாயிதாப் பணம் வசூலிக்கின்றனர்.

கந்தன் : வாயிதாப் பணம் என்றால் என்ன ?

தந்தை : நிலத்திற்கு வரி கொடுக்கிறோம் அல்லவா ? அந்த வரிக்கு வாயிதாப் பணம் என்று பெயர்.

கந்தன் : நிலத்திற்கு ஏன் வரி கொடுக்க வேண்டும் ? நிலம் நம்முடையதுதானே.

தந்தை : நிலம் நம்முடையதுதான். ஆனால், நாம் நம்மை ஆளும் அரசாங்கத்துக்கு உட்பட்ட குடிகள். அரசியலார் நமக்காகப் பல காரியங்களைச் செய்கிறார்கள். நிலங்களுக்குத் தண்ணீர் பாய்வதற்கு வேண்டிய வசதிகள் செய்கிறார்கள் ; திருடர் பயம் இல்

லாது பாதுகாக்கிருர்கள். திருடர்களேயும் கலகம்செய்பவர்களேயும் தண்டிக்கிருர்கள்; தருமவைத்தியசாலே ஏற்படுத்தியிருக்கிருர்கள். இன்னும், இவைபோன்ற பல நன்மைகளேச் செய்கிருர்கள். இதற்கெல்லாம் பணம் வேண்டுமல்லவா? நாம் அரசாங்கத்திற்குக் கொடுக்கும் வரிப்பணமே இதற்கெல்லாம் உதவுகிறது.

கந்தன் : சரிதான், அப்பா. இப்பொழுதுதான் நிலத்திற்கு வரிகொடுக்க வேண்டிய அவசியம் தெரிந்தது. ஆனல், நிலவரிக்கு ஏன் வாயிதாப் பணம் என்று பெயர்?

தந்தை : ஒரு ஆண்டுக்குள்ள நிலவரியை நாலு தடவையாக வாங்குகிருர்கள். தடவைக்கு வாயிதா என்பது பெயர். ஆதலால், ஒரு தடவையில் கொடுக்கும் பணத்திற்கு வாயிதாப் பணம் என்று பெயர் வழங்குகின்றது.

கந்தன் : கிராம முனிசீப்பு கையில் ஏதோ காகிதம் வைத்துக் கொண்டிருக்கிருரே, அது என்ன?

தந்தை : அதுதான் வரிக்கணக்கு. அதில் நிலத்துக்குரியவர் ஒவ்வொருவரும் கொடுக்க வேண்டிய வாயிதாப் பணம் இவ்வளவு என்று குறித்திருக்கும்.

கந்தன் : இன்னின்னர் இவ்வளவு கொடுக்க வேண்டும் என்று இவர் கணக்கு வைத்திருப்பாரா?

தந்தை : ஆமாம்; ஆனல், கணக்கு இவரால் தயாரிக்கப்பட்டதல்ல; கணக்கப்பிள்ளே தயாரித்தது.

கந்தன் : கணக்கப்பிள்ளே என்பவர் யார்?

தந்தை : அவர் இங்கு இல்லை. அவர்தான் கிராமக் கணக்கைத் தயாரிப்பவர். அந்தக் கணக்கில் கிராமத்தில் இன்னின்னருக்கு இவ்வளவு நிலம் உண்டு என்றும், அந்த நிலத்தில் இன்னின்ன பயிர் சாகுபடி செய்யப்பட்டதென்றும், அதற்கு வரி இவ்வளவென்றும் குறிக்கப்பட்டிருக்கும்.

கந்தன் : கிராம முனிசீப்பின் பக்கத்தில் தலையாரியும் வெட்டியானும் எதற்காக நிற்கிறார்கள் ?

தந்தை : அவர்கள் கிராம முனிசீப்பு ஏவின வேலையைச் செய்பவர்கள். அதனால், அவர் வரி வசூலிக்க வரும்போது அவர்களும் கூட வருவார்கள்.

கந்தன் : இவர்களுக்குச் சம்பளம் உண்டா ?

தந்தை : இல்லாமல் என்ன ? உண்டு.

கந்தன் : அப்படியானால் இவர்களும் சர்க்கார் வேலைக்காரர்களா ?

தந்தை : ஆமாம்; கிராம முனிசீப்பு, கணக்கப் பிள்ளை இவர்களைப் போலவே தலையாரியும், வெட்டியானும் சர்க்கார் வேலைக்காரர்களே. ஆனால், இவர்களில் கிராம முனிசீப்புக்கே பொறுப்பும் வேலையும் அதிகம்.

கந்தன் : என்ன வேலை ? பணம் வசூலிப்பது தானே ?

தந்தை : அது மட்டுமா ? அவர் ஒரு கிராமத்தில் வசூலிக்கப்பட வேண்டிய வரிப் பணம் முழுவதும் நிலுவையின்றி வசூலித்தாக வேண்டும். வசூலித்த

பணத்தை ஒழுங்காகச் சர்க்கார் கஜானுவில் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும். கிராமங்களில் கலகம், களவு இவைகள் நடந்தால் அவற்றைக் கவனித்து மேலதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டும். பொதுவாக ஒவ்வொரு கிராமமும் ஒவ்வொரு கிராம முனிசீப்பின் மேற்பார்வையில் இருக்கும். அதனுல், அவருக்குக் கிராமத் தலைவர் என்று பெயர். அவருக்கு மதிப்பும் அதிகம்.

கந்தன் : சரி அப்பா, நாம் போகலாம் வாருங்கள்.

வரி	நிலுவை	அவசியம்	சர்க்கார்
வாயிதா	சாகுபடி	வசதிகள்	சம்பளம்
தடவை	குடிகள்	ஏவுதல்	இன்னின்னுர்
கஜானு	தலையாரி	பொறுப்பு	கணக்கப்பிள்ளை

அரும்பதவுரை

நிலுவை - பாக்கி நிற்கும் தொகை. அவசியம் - முக்கியம். கஜானு - சர்க்கார் பணம் வைத்திருக்கும் இடம். சாகுபடி - பயிர் செய்தல். ஏவுதல் - கட்டளையிடுதல், உத்தரவிடுதல். களவு - திருட்டு.

பயிற்சி

1. வரி, வசூல், தயாரிப்பார், கிராமம், அவசியம்—இச் சொற்கள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்துக் கூறு.

2. கோடிட்ட இடங்களில் ஏற்ற சொற்களைச் சேர்த்துப் படி :

கிராம முனிசீப்பு கிராமத்திற்கு ——.

கிராம முனிசீப்புக்கு —— அதிகம்.

சர்க்கார் குடிகளுக்குப் பல —— செய்கிறார்கள்.

குடிகள் —— வரிப்பணம் ——.

கேள்விகள்

1. கிராம முனிசீப்பின் வேலைகள் யாவை?

2. கணக்கப்பிள்ளை என்னென்ன கணக்குகளைத் தயாரிப்பார்?

3. குடிகள் சர்க்காருக்கு நிலவரி செலுத்துவது எதற்காக?

25. ஆத்தி சூடி

அறஞ்செய விரும்பு.
ஆறுவது சினம்.
இயல்வது கரவேல்.
ஈவது விலக்கேல்.
உடையது விளம்பேல்.
ஊக்கமது கைவிடேல்.
எண்ணெழுத்து இகழேல்.
ஏற்பது இகழ்ச்சி.
ஐயம் இட்டுண்.
ஒப்புர வொழுகு.
ஓதுவது ஒழியேல்.
ஔவியம் பேசேல்.
கண்டொன்று சொல்லேல்.
ஙப்போல் வளை.
சனி நீராடு.
ஞயம்பட வுரை.
தந்தை தாய்ப் பேண்.
நன்றி மறவேல்.
பருவத்தே பயிர்செய்.
மனம் தடுமாறேல்.
வஞ்சகம் பேசேல்.

இளமையிற் கல்.
காப்பது விரதம்.
குணமது கைவிடேல்.
கேள்வி முயல்.
கோதாட் டொழி.
செய்வன திருந்தச் செய்.
சேரிடம் அறிந்து சேர்.
சோம்பித் திரியேல்.
தெய்வம் இகழேல்.
நன்மை கடைப்பிடி.
நூல் பல கல்.
நோய்க்கு இடங்கொடேல்.
பெரியாரைத் துணைக்கொள்.
பொருள்தனைப் போற்றிவாழ்.
மீதுண் விரும்பேல்.
மூர்க்கரோடு இணங்கேல்.
மேன்மக்கள் சொற் கேள்.
மொழிவ தற மொழி.
வித்தை விரும்பு.

அற	கோது	வஞ்சகம்	ஒழியேல்
வளை	கேள்வி	உத்தமன்	கரவேல்
பேண்	வித்தை	துயிலெழு	விலக்கேல்
ஐயம்	மீதூண்	உடையது	விளம்பேல்
சினம்	விரதம்	இயல்வது	தடுமாறேல்
அறம்	திருந்த	ஆறுவது	இணங்கேல்
ஞயம்	காப்பது	ஒள்வியம்	கைவிடேல்

அரும்பதவுரை

அறம் - தருமம். ஆறுவது - தணியவேண்டியது. சினம் - கோபம். இயல்வது - செய்யக்கூடிய உதவி. கரத்தல் - ஒளித்தல். ஈவது - (பிறர் தருமமாகக்) கொடுப்பது. உடையது - பெற்றுள்ள பொருள். ஊக்கம் - மனக்கிளர்ச்சி. எண் - கணக்கு. எழுத்து - தாய்மொழிப் பாடம். ஏற்பது - பிச்சை கேட்பது. ஐயம் - பிச்சை. ஒப்புரவு - உலக நடை. ஒழுகு - மேற்கொண்டு நட. ஒளவியம் - பொறாமை. வளை - தழுவு. ஞயம்பட - இனிமை உண்டாகும்படி. பேண் - காப்பாற்று. பருவம் - ஏற்ற காலம். கல் - படி. கேள்வி - கற்றவர் கூறக் கேட்டல். கோது - குற்றம். ஆட்டு - ஆடுதல்.

26. கொன்றை வேந்தன்

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
இல்லறம் அல்லது நல்லறம் அன்று.
ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு.
ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.
ஏவா மக்கள் மூவா மருந்து.
ஐயம் புகினும் செய்வன செய்.
ஒருவனைப் பற்றி ஒரகத் திரு.
ஓதலின் நன்றே வேதியர்க் கொழுக்கம்.
ஔவியம் பேசுதல் ஆக்கத்திற் கழிவு.
கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை.
கிட்டா தாயின் வெட்டென மற.
குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை.
கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி.
சான்றோர் என்கை ஈன்றோர்க் கழகு.
சீரைத் தேடின் ஏரைத் தேடு.
சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்.
தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை.
தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை.

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு.
தீராக் கோபம் போராய் முடியும்.
தேடா தழிக்கின் பாடாய் முடியும்.
தையும் மாசியும் வையகத் துறங்கு.
தோழ னோடும் ஏழைமை பேசேல்.
நல்லிணக்க மல்லது அல்லற் படுத்தும்.
நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை.
நீரகம் பொருந்திய ஊரகத் திரு.
நுண்ணிய கருமமும் எண்ணித் துணி.
நோன் பென்பது கொன்று தின்னாமை.
புலையும் கொலையும் களவும் தவிர்.
பொல்லாங் கென்பவை எல்லாம் தவிர்.
மருந்தே ஆயினும் விருந்தோ டுண்.
மாரியல்லது காரியம் இல்லை.
மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை.
முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்.
வளவன் ஆயினும் அளவறிந் தழித்துண்.
ஊக்கம் உடைமை ஆக்கத்திற் கழகு.

79
031(31)
N86

மாரி	சுருங்குதல்	அகம்	வெட்டென
சுற்றம்	கைப்பொருள்	ஏவா	கிட்டாது
வையம்	மெய்ப்பொருள்	கற்பு	ஏழைமை
திரை	பொல்லாங்கு	எண்ணி	காரியம்
எண்	தேம்பி	தவிர்	தேட்டு
புலை	திரவியம்	களவு	புகினும்
அன்னை	ஈன்றோர்	நீரகம்	வேதியர்
போர்	அல்லல்	சோம்பர்	ஆக்கம்
உண்டி	கருமம்	மந்திரம்	சாலவும்
முற்பகல்	நோன்பு	கேடு	மூவாமருந்து
பிற்பகல்	வளவன்	பாடு	இல்லறம்
திறம்பாமை	ஆலயம்	சான்றோர்	பிதா

அரும்பதவுரை

அன்னை - தாய். பிதா - தகப்பன். சாலவும் - மிகவும். தேட்டு - தேடிய பொருள், செல்வம். ஏவா - கட்டளையிடாமலே குறிப்பினால் அறிந்து ஒழுகுகின்ற. மூவாமருந்து - மூப்படையாமைக்குக் காரணமாகிய மருந்து, தேவாமிர்தம். வேதியர் - வேதம் ஓதுபவர். திறம்பாமை - மாறாமை. தேம்பி - வருந்தி. மந்திரம் - உறுதிமொழி. திரை - அலை. திரவியம் - செல்வம். பாடாய் - கஷ்டமாய். வையகம் - வைக்கோல் வேய்ந்த வீடு. அல்லல் - துன்பம். பொல்லாங்கு - தீயவை. வளவன் - (சோழன்), பெருஞ்செல்வன். ஆக்கம் - செல்வம்.

13533
சென்னை-600 008.

பா/15

PYNTAMIL VACHAKAM

FOR STANDARD III

BY

VIDWAN M. PERIASAWMY PILLAI

T. G. GOPAUL PILLAI

PUBLISHERS

TEPPAKULAM
TIRUCHIRAPALLI

2/27, BROADWAY
G. T. MADRAS

COPYRIGHT]

[PRICE RE. 0-8-0